# வருடாந்த செயற்பாட்டு அறிக்கை
# மற்றும்
# கணக்குகள்
# 2017

# நோக்கு

*பொருளாதார மற்றும் சமூக ரீதியில் திருப்தி மிக்கதோர் ஓய்வூதியர் சமுதாயம்*

# செயற்பணி

*அரச சேவையில் ஓய்வூதியர்களுக்கும் அவர்களின் பயனாளிகளுக்கும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிலைபேறான முகாமைத்துவ முறைகளைப் பயன்படுத்தி, தனியார் மற்றும் அரச துறையினர் உள்ளடங்கிய சேவைபெறுநர்களினதும் சேவைவழங்குநர்களினதும் திருப்தியை உயர் மட்டத்தில் உறுதிப்படுத்தி, சட்ட ரீதியான நலன்களை வழங்குதல்.*

## நிறுவன கட்டமைப்பு விளக்கப்படம்




ஒஅ –ஓய்வூதிய அலுவலர்
பா.உ- பாதீட்டு உதவியாளர்
அ.உ-அபிவிருத்தி உதவியாளர்

அ.உத்- அபிவிருத்தி அலுவலர்
பொமுஉ- பொது முகாமைத்துவ உதவியாளர்
ததொஉ - தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்

வி.கா - விடுதிக் காப்பாளர்
அனேசே- அலுவலக ஊழியர் சேவை
சா- சாரதி

## ஓய்வூதியத் திணைக்களம் - அங்கீகாரம் பெற்ற ஆளணி

| பதவியின் தன்மை | பதவி | பொருந்தக்கூடிய சேவை | ஊதியக் கட்டமைப்பு | அங்கீகரிக்கப் பட்ட ஆளணி எண்ணிக்கை | சேவையில் ஆளணி எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|---|
| உயர் நிலை | ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் | SLAS (Special) | SL 3- 2016 | 01 | 01 | 01 |
| | மேலதிக ஓய்வூதியப் பணிப்பாளர் | SLAS (Special) | SL 3- 2016 | 01 | 0 | 0 |
| | மருத்துவ அலுவலர் | Primary Grade | SL 2- 2016 | 1 | 1 | 0 |
| | ஓய்வூதியப் பணிப்பாளர் | SLAS(Class I) | SL 1-2016 | 4 | 3 | 1 |
| | பிரதம கணக்காளர் | SLAcS(Class I) | SL 1- 2016 | 01 | 01 | 00 |
| | பிரதம உள்ளககணக்காய்வு | SLAcS(Class I) | SL 1- 2016 | 01 | 01 | 00 |
| | பிரதி/உதவிப் பணிப்பாளர் | SLAS (Class II or III) | SL 1- 2016 | 10 | 08 | 02 |
| | உள்ளககணக்காய்வாளர் | SLAcS(Class I) | SL 1- 2016 | 01 | 00 | 00 |
| | கணக்காளர் | SLAcS(Class I) | SL 1- 2016 | 01 | 00 | 00 |
| | கணக்காளர் | SLAcS(Class II or III) | SL 1- 2016 | 10 | 09 | 01 |
| | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | SLICT Service II/ III | SL 1- 2016 | 01 | 00 | 01 |
| | சட்ட அலுவலர் | Dept | SL 1 - 2016 | 01 | 00 | 01 |
| | மென்பொருள் அபிவிருத்தி அலுவலர் | Dept | | 03 | 00 | 03 |
| | | | | **39** | **24** | **15** |
| மூன்றாம் நிலை | நிர்வாக அலுவலர் | PMAS (Supra) | MN 7- 2016 | 04 | 02 | 02 |
| | மொழிபெயர்ப்பாளர் சிங்களம்- ஆங்கிலம் -1 தமிழ் – ஆங்கிலம் -1 | TS | MN 6- 2016 | 02 | 02 | 00 |
| | தகவல் , தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | SLICT Service | MN 6- 2016 | 05 | 02 | 03 |
| | | | | **11** | **7** | **4** |
| இரண்டாம் நிலை | தொழில்நுட்ப அலுவலர் | SLTS | MN 3- 2016 | 01 | 00 | 01 |
| | பாதீட்டு உதவியாளர் | RS | MN 4- 2016 | 01 | 01 | 00 |
| | ஓய்வூதிய அலுவலர் | Dept | MN 4- 2016 | 340 | 277 | 63 |
| | அபிவிருத்தி உத்தியோகத்தர் | DOs | MN 4- 2016 | 398 | 371 | 27 |
| | முகாமைத்துவ உதவியாளர் | PMAS | MN 2- 2016 | 190 | 115 | 75 |
| | த. தொ.தொ உதவியாளர் | SLICT Service | MT 1- 2016 | 05 | 02 | 03 |
| | ஆவண உதவியாளர் | Dept | MN 1- 2016 | 141 | 130 | 11 |
| | உதவிமேசை இயக்குனர் | Dept | | 2 | 0 | 2 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1078 | 896 | 182 |
| முதன்மை நிலை | விடுதிக் காப்பாளர் | Dept | PL 1- 2016 | 02 | 02 | 00 |
| | சமயற்காரர் / தோட்டக்காரர் | Dept | PL 2- 2016 | 04 | 04 | 00 |
| | சாரதி | D/S | PL 3- 2016 | 12 | 12 | 00 |
| | மின்சாரப் பராமரிப்பாளர் | Dept | PL 3- 2016 | 01 | 00 | 01 |
| | அலுவலக உதவியாளர் | KKS | PL 1- 2016 | 56 | 46 | 10 |
| | | | | 75 | 68 | 7 |
| மொத்தம் | | | | 1209 | 1001 | 208 |

# பொருளடக்கம்

| | | பக்க இல |
|---|---|---|
| 01. | அறிமுகம் | 1-7 |
| 02. | புதிய அறிமுகம் | 8-10 |
| | 02.I. தகவல் தொழில்நுட்ப புதிய அணுகல் | 8-9 |
| | 02.II. விடயம் தொடர்பில் புதிய அணுகல் | 9-10 |
| 03. | மேம்படுத்தல் | 11-13 |
| | 03.I தகவல் தொழில்நுட்ப மேம்பாடு | 11 |
| | 03.II விடயக் அடிப்படை செயல்முறை மேம்பாடு | 11-12 |
| | 03.III பௌதீக விரிவாக்கம் | 13 |
| 04. | சாதனைகள் | 14-17 |
| | 04.I சத்காரப் பியச | 14-15 |
| | 04.II பொதுமக்கள் தினம் | 15 |
| | 04.III பொதுச் சாளரம் | 15-16 |
| | 04.IV உள்ளகக் கணக்காய்வு | 16-17 |
| 05. | திறன் முகாமைத்துவம் | 18-21 |
| | 05.I தகவல் தொழில்நுட்பத் தொகுதி முகாமைத்துவம் | 18 |
| | 05.II உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நெறி | 19-20 |
| | 05.III வெள்ளிக் கிழமை கருத்துக்களம் | 20-21 |
| 06. | வருடாந்த சமூகநல நிகழ்ச்சித் திட்டம் | 22-24 |
| | 06.I தேசிய ஓய்வூதியர் தினக் கொண்டாட்டம் | 22 |
| | 06.II தொழில்நுட்ப அமர்வு | 22-23 |
| | 06.III தமிழ் சிங்களப் புத்தாண்டு | 23 |
| | 06.IV ஊடகப் பாவனை | 24 |

| | | |
|---|---|---|
| 07. | நிதி மீளாய்வு | 25-28 |
| | 07.I மரணப்பணிக் கொடைக் கொடுப்பனவுகள் | 25-26 |
| 08. | நிதி வெளியீடுகள் | 29-42 |

# அறிமுகம்

ஓய்வூதியதிணைக்களம்1970.12.23 ஆம் திகதி “அ”தர நிறுவனமாக பொது நிர்வாக அமைச்சின் கீழ் உருவாக்கப்பட்டது. இத்திணைக்களத்தின் நோக்கம் மூன்று முக்கியவிடயப் பரப்புகளைக் கொண்டுள்ளது. அதன்படி அம் மூன்று விடயங்களாவன, ஓய்வூதிய வழங்கலானது இலங்கை அரச சட்டத்தின் ஒரு பகுதியாக மாற்றங்கண்டுள்ள 1934ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி உருவாக்கப்பட்ட ஓய்வூதியப் பிரமாணத்தில் காலத்திற்குக் காலம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, 1972 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி திருத்தப்பட்ட ஓய்வூதிய பிரமாணத்தின் பிரகாரம் செய்யப்பட வேண்டும் என்பது ஓர் விடயப்பரப்பாவதுடன் விதவை, தபுதாரர், அனாதை மற்றும் ஊனமுற்றோர் ஓய்வூதியமானது 1898 இன் 01 ஆம் இலக்க விதவை, தபுதாரர், அனாதை மற்றும் ஊனமுற்றோர் ஓய்வூதியம் நிதியச் சட்டமாக உருவாக்கப்பட்டு பல இற்றைப் படுத்தல்களின் பின்னர் 2010 ஆம் ஆண்டு 08 ஆம் மற்றும் 09 ஆம் இலக்கத்தில் செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாக செலுத்தப்பட வேண்டும் என்பது அடுத்த விடயப் பரப்பாவதுடன் பொதுச் சேவைகள் சேமலாப நிதியத்தினை,1942 ஆம் இலக்க 18 ஆம் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக செலுத்துதல் வேண்டும் என்பது இறுதி விடயப் பரப்பாகும்.

இந்த மூன்று விடயப் பரப்புகளையும் சட்ட எல்லைகளாகக் கொண்டு அனைத்து கொடுப்பனவுகள் மற்றும் அறவீடுகளை கண்காணித்தல் ஓய்வூதிய திணைக்களத்தின் அடிப்படைத் தொழிற்பாடாவதுடன் 2017 டிசம்பர் மாதத்தில் ஓய்வூதியத் திணைக்களத்திலிருந்து 600,867 ஓய்வூதியர்கள் ஓய்வூதியம் பெற்றுள்ளனர். இது 2016 உடன் ஒப்பிடுகையில் 3.6% அதிகரிப்பாகும்.

ஓய்வூதியத் திணைக்களத்தின் பிரதான செயற்பாட்டு அமுலாக்கலை எளிதாக்கும் பொருட்டு பிரிக்கப்பட்ட குறியீட்டுகள் மூலம் தொடர்புடைய விவகாரங்கள் செயற்படுத்தப்படுவதுடன் அனைத்து செயல்முறைகளையும் இலகுவாக்கும் பொருட்டு நவீன தகவல் தொழில்நுட்ப உத்திகளும் பயன்படுத்தப்படுகின்றன.

அதற்கமைய, தீவு முழுவதும் சேவையாற்றும் அனைத்து அரசாங்க ஊழியர்கள் மற்றும் ஆயுதப் படையினர் இறுதிச் செவையை முடிவுறுத்தியங பின்னர் அவர்களுக்கு இறுதி நன்மைகளை வழங்கும் பொருட்டு திணைக்களத்தின் பதிவிடல் பிரிவு ஓய்வூதியப் பதிவிடல் செயல் முறையைச் செய்து வருகிறது. ஓய்வூதியர்களால் ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை பெறுதற் பொருட்டு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அதற்கான இலக்கங்கள் வழங்கப்படுவதுடன் முதல் ஓய்வூதியக் கொடுப்பனவு தரவுத் தளத்தில் பதிவிடப்பட்டு கொடுப்பனவு ஆரம்பிக்கும் அதேவேளை இப்பிரிவால் ஓய்வூதியர்களுக்கு உரித்தான காப்புறுதி அடங்கலாக சமூகப்பாதுகாப்பு நன்மைகளும் வழங்கப்படும். அத்துடன் திருத்திய ஓய்வூதியக் கொடுப்பனவுகள், விசேட இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் மற்றும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் ஆகிய நடவடிக்கைகளும் மேற்கொள்ள ப்படும்.

ஓய்வூதிய விண்ணப்பங்கள் இயங்கலை மூலம் அனுப்பப்படுவதுடன், அவ்விண்ணப்பங்களில் உள்ள குறைபாடுகள் அனைத்தும் இயங்கலை ஊடாகவே அறிவிக்கப்படுவதால், பதிவுசெய்தல் செயல்முறையானது விரைவாகவும் மற்றும் திருத்தமாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் நடைபெறுகிறது.

### அட்டவணை 1

| ஓய்வூதியம் பதிவிடல் | | | |
|---|---|---|---|
| மாதம் | சிவில் | இராணுவம் | மொத்தம் |
| ஜனவரி | 2049 | 142 | 2191 |
| பிப்ரவரி | 1660 | 68 | 1728 |
| மார்ச் | 1779 | 54 | 1833 |
| ஏப்ரல் | 1294 | 44 | 1338 |
| மே | 2335 | 61 | 2396 |
| ஜூன் | 2539 | 126 | 2665 |
| ஜூலை | 2490 | 305 | 2795 |
| ஆகஸ்ட் | 2373 | 163 | 2536 |
| செப்டம்பர் | 1790 | 107 | 1897 |
| அக்டோபர் | 1946 | 32 | 1978 |
| நவம்பர் | 1346 | 109 | 1455 |
| டிசம்பர் | 1908 | 87 | 1995 |
| மொத்தம் | **23509** | **1298** | **24807** |

மூலம் – பதிவிடல் பிரிவு

### விளக்கப்படம் - 01




மேலும் மையப்படுத்தப்பட்ட ஓய்வூதியம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கையின் கீழ் “ரி” இணைப்பில் குறிப்பிடப்பட்டது போல் 30/88 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கமைய ஓய்வு பெறுபவர்களது பன்முகப்படுத்தப்படாத ஓய்வூதியக் கொடுப்பனவுகள், நிரந்தரமாக பொதுச் சேவைக்கு விடுவிக்கப்பட்ட ஓய்வு பெற்ற அலுவலர்களின் ஓய்வூதியக் கணிப்பீடுகள் போன்றவை கணிப்புப் பிரிவால் மேற்கொள்ளப்படுகிறது.

ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், 2015 ஆம் ஆண்டு யூலை மாத முதல் ஓய்வூதிய முதற்கொடுப்பனவு செயற்படுத்தப்படுவதற்கு முன்னதாக பதிவுசெய்யப்பட்ட ஓய்வூதியரது ஓய்வூதிய உரித்தை உறுதிப்படுத்தும் நோக்கில் சத்கார பியசவிற்கு ஓய்வூதியர் வருகை தர வேண்டியது கட்டாயமானதாக்கப்பட்டு உள்ளது. ஓய்வூதியர் மரணமடையும் போது அதற்குப் பதிலாக ஓய்வூதியம் தொடர்பில் எழும் அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கான ஒரு வாய்ப்பு வழங்கப்படும். ஓய்வூதிய அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதும் அங்கு வழங்கப்படும் வேறுபட்ட சேவைகள் தொடர்பிலும் அறிவுறுத்தப்படும்.

### அட்டவணை 2

| முதல்க் கொடுப்பனவு | |
|---|---|
| மாதம் | எண்ணிக்கை |
| ஜனவரி | 1633 |
| பிப்ரவரி | 2375 |
| மார்ச் | 1840 |
| ஏப்ரல் | 1929 |
| மே | 1309 |
| ஜூன் | 1883 |
| ஜூலை | 2223 |
| ஆகஸ்ட் | 3222 |
| செப்டம்பர் | 3440 |
| அக்டோபர் | 2740 |
| நவம்பர் | 2485 |
| டிசம்பர் | 2375 |
| மொத்தம் | **27454** |

மூலம் – பதிவிடல் பிரிவு

### விளக்கப்படம் – 02




ஒய்வூதியர் சமூகம் சார்பான அனைத்து கொடுப்பனவுகளும் கணக்குக் கிளையினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. அதனிடத்து ஒய்வூதியர்கள் சமூகத்திற்கான மாதாந்த ஒய்வூதியக் கொடுப்பனவு நடவடிக்கைகள் மாதாந்த ஒய்வூதியக் கொடுப்பனவுப் பிரிவினூடாக மேற்கொள்ளப்படுவதுடன் அவ்வழியிலேயே மாதாந்த ஒய்வூதியம் ஒய்வூதியரது வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வைப்பிலிடப்படும். மேலும் பணிக் கொடை கிளையால் பணிக்கொடை கொடுப்பனவு செய்யப்படுவதுடன் ஒய்வூதியரிடமிருந்து அரசுக்கு வருமதியான தொகைகளும் அக்கிளையாலேயே அறவிடப்படும். மேலும் வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்படும் ஒதுக்கீடுகளின் பயன்பாடு பற்றிய கணக்கு முகாமைத்துவம் சார்பிலான விடயங்கள் கணக்குக் கிளையால் கையாளப்படும்.

### அட்டவணை 3

| ஒய்வூதியக் கொடுப்பனவு | | |
|---|---|---|
| மாதம் | ஒய்வூதியம்பெறுவோர் எண்ணிக்கை | மாதாந்த செலவீனம்(மில்) |
| ஜனவரி | 580336 | 14386.91 |
| பெப்ரவரி | 583273 | 14994.65 |
| மார்ச் | 584508 | 14807.06 |
| ஏப்ரல் | 585670 | 14828.75 |
| மே | 586012 | 14660.22 |
| ஜூன் | 587083 | 14886.29 |
| ஜூலை | 588857 | 15208.86 |
| ஆகஸ்ட் | 591486 | 15510.34 |
| செப்டம்பர் | 593859 | 15667.28 |
| ஒக்டோபர் | 596301 | 15347.69 |
| நவம்பர் | 598488 | 15629.53 |
| டிசம்பர் | 600867 | 16079.95 |
| மொத்தம் | | 181007.53 |

மூலம் – கணக்குப் பிரிவு

### விளக்கப்படம் – 03



அத்துடன் விதவைகள் மற்றும் அநாதைகள் ஒய்வூதியப் பிரிவானது நிரந்தர மற்றும் ஓய்வூதிய உரித்துடைய நியமனத்தை பெறும் அரச அலுவலர்களது விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நலன் தொடர்பிலான பதிவுகளை அத்திட்டத்தின் கீழ் மேற்கொள்வதுடன் மரணிக்கும் அலுவலர்களின் மரணப் பணிக் கொடையை அவர்களது தங்கிவாழ்வோருக்கு கொடுப்பனவு செய்வதுடன் வாழ்க்கைத்துணை, அநாதை மற்றும் ஊனமுற்ற பிள்ளைகளுக்கான ஓய்வூதிய உரித்தை வழங்குகிறது. அரச அலுவலர்களுக்கான விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்தின் கீழான பதிவு அதனிடத்து இயங்கலையினூடாக மேற்கொள்ளப்படுகிறது.

**அட்டவணை 4**

| விதவைகள் அநாதைகள் ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை | |
|---|---|
| மாதம் | எண்ணிக்கை |
| ஜனவரி | 187126 |
| பிப்ரவரி | 187340 |
| மார்ச் | 187456 |
| ஏப்ரல் | 187538 |
| மே | 187517 |
| ஜூன் | 187640 |
| ஜூலை | 187959 |
| ஆகஸ்ட் | 188340 |
| செப்டம்பர் | 188508 |
| அக்டோபர் | 188997 |
| நவம்பர் | 189337 |
| டிசம்பர் | 189684 |

மூலம் – வி.அ.ஓ பிரிவு

இரட்டைப் பிராஜா உரிமையுள்ள இரண்டு (2) வருடங்களுக்கு அதிகமான காலப்பகுதிக்கு வெளிநாடுகளில் வாழும் இலங்கையில் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவு நடவடிக்கைகளை சிரமங்கள் இன்றி திருத்தமான முறையில் சட்ட ஏற்பாடுகளிற்கமைய வெளிநாட்டு ஓய்வூதியக் கிளை கையாண்டுவருகிறது.

18 ஆம் இலக்க 1942 ஆம் ஆண்டு பொது சேவை நம்பிக்கை நிதியச் சட்டத்திற்கமைய அரச சேவைகளில் ஈடுபட்டுள்ள நிரந்தர ஓய்வூதிய உரித்தற்ற பொதுச் சேவை அலுவலர்களிற்கான நன்மைகளை அவர்களது சேவைக்கால முடிவில், பொது சேவை நம்பிக்கை நிதியப் பிரிவானது உறுதிப்படுத்துகிறது. வெவ்வேறு நிறுவனங்களில் மற்றும் தூதரகங்களில் சேவையாற்றும் ஓய்வூதிய உரித்தற்ற சம்பளத்தில் 8% தொகையை இதற்குப் பங்களிப்புச் செய்யும் அரச அலுவலர்களின் நன்மைகளை அவர்கள் சேவையை முடிவுறுத்தும் போது இப்பிரிவு வழங்குவதுடன் மேலதிக நிதியை உயர் வட்டியைப் பெற்று தரும் அரச முறிப் பத்திரங்களை வாங்குவதற்கு முதலிடுவதுடன் அங்கத்தவர்களுக்கு ஆண்டிறுதியில் வட்டி பெற்றுக் கொடுக்கும் செயற்பாட்டையும் இப்பிரிவு செய்துவருகிறது.

மற்றைய நிறுவனங்களிற்கிடையான ஓய்வூதியத் திணைக்களத்தின் ஒவ்வொரு ஆவணப் பரிமாற்றங்களிலும் தபால் பிரிவு ஓர் இடைத் தரகராக செயற்பட்டுவருகிறது. இங்கு பதிவுத்தபால் கடிதங்கள், சாதாரண கடிதங்கள் மற்றும் கைவழிக் கடிதங்களென நாளாந்தம் ஏறத்தாள 1200 கடிதங்களைக் விடயத்திற்கேற்பவும் ஸ்கான் செய்யப்படுவதற்கேற்பவும் வகைப்படுத்திய பின்னர் தரவுத் தளத்தில் பதிவிட்டப்படுகிறது. அதேபோல் நாளாந்தம் திணைக்களத்தால் 1000 தொடக்கம் 1500 கடிதங்கள் ஏனைய நிறுவனங்களிற்கு பதிவுத்தபால் கடிதங்கள், சாதாரண கடிதங்கள் மற்றும் கைவழிக் கடிதங்களென பொருத்தமான வழி முறையினூடாக அனுப்பப்படுகின்றன.

அதனில் தபால் திணைக்கள ஊழியர்களுக்கு சாதாரண அஞ்சல்கள் முறையாகக் குறிப்பிடப் படும்.

திணைக்களத்தினுள் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் மென்பொருளை வடிவமைத்தல் மற்றும் அதன் பயன்படுத்துகை தொடர்பிலான பயிற்சி இன்றியமையாத ஒன்றாவதுடன் இது தகவல் தொழில்நுட்ப பிரிவின் உள்ளக மென்பொருள் அபிவிருத்திச் சபையால் மேற்கொள்ளப்படும். மேலும் தகவல் தொழில்நுட்பப் பிரச்சனைகள் மற்றும் கணனி வன்பொருள் திருத்தப் பணிகளும் தகவல் தொழில்நுட்ப பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. திணைக்களத்தின் இணையத் தளத்தைப் பராமரித்தலும் மேற் சொன்ன பிரிவின் இன்னோர் கடமையாகும்.

திணைக்களத்தின் பௌதீக மற்றும் மனித வள அபிவிருத்தியானது நிர்வாகப் பிரிவால் மேற்கொள்ளப்படுகிறது. நிர்வாகப் பிரிவின் மனிதவள மேம்பாட்டின் கீழ் மனிதவள பயிற்சிகள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களை வழங்கல், ஓய்வூதியர்கள் தொழிற்சங்கத்தை ஒருங்கிணைத்தல் மற்றும் திணைக்கள அலுவலர்களது தனிநபர் கோவைகளைப் பராமரித்தல் ஆகிய கடமைகள் மேற்கொள்ளப்படுகிறது.

அத்துடன் நிர்வாகப் பிரிவின் மனிதவள மேம்பாட்டின் கீழ் திணைக்களத்தினால் அனைத்து கட்டிட நிர்மாணங்கள் அத்துடன் பராமரிப்பு மற்றும் மீளமைப்பு விவகாரங்கள், சேவை வழங்கும் பல்வேறு நிறுவனங்களிற்கு பணம் செலுத்துதல், பௌதீக மற்றும் வாகன, இயந்திரப் பராமரிப்பு, திணைக்களத்திற்கு மேலதிகமாக உள்ள இடத்தை வாடகைக்கு வழங்கல் மற்றும் விடுமுறை விடுதிகளை வாடகைக்கு அமர்த்தி வருவாயைப் பெற்றுக் கொள்ளல் ஆகியவையும் மேற்கொள்ளப்படுகின்றன.

**அட்டவணை 05**

| **ஓய்வுவிடுதி வருமானம்** | |
|---|---|
| **ஓய்வுவிடுதி** | **வருவாய் (ரூ.)** |
| **களனிஓய்வு விடுதி** | 6,970,300.00 |
| **ரம்பொடஓய்வு விடுதி** | 359,425.00 |
| **மொத்தம்** | **7,329,725.00** |

மூலம் – நிர்வாகப் பிரிவு



மூலம் - ஊடகப் பிரிவு

## அட்டவணை 06

| நிறுவனத்தின் பெயர் | வாடகைக்குவழங்கிய % | கட்டிடங்கள்வாடகை (ரூ) |
|---|---|---|
| ஹைலேண்ட் பால்ப்பொருள் உற்பத்தி நிலையம் | 0.48 | 94,500 |
| சம்பத் வங்கி A T M | 1.03 | 264,000 |
| ஹற்றன் நஷனல் வங்கி | 8.3 | 2,050,000 |
| ஹற்றன் நஷனல் வங்கி ATM | 1.01 | 226,000 |
| பொது சேவை ஓய்வூதிய அறக்கட்டளை நிதியம் | 0.5 | 136,000 |
| சுகாதார சேவைகள்பிராந்திய பணிப்பாளர் அலுவலகம் | 14.33 | 2,850,000 |
| லங்காமருத்துவமனை (தனியார்)நிறுவனம் | 1.51 | 300,000 |
| புடவைக் கைத்தொழில் திணைக்களம் | 6.11 | 1,560,000 |
| மோட்டார் போக்குவரத்து மாகாண ஆணையாளர் அலுவலகம் | 32.69 | 8,150,000 |
| சிற்றுண்டிச் சாலை | 1.51 | 345,000 |
| மாகாண காணிதிணைக்களம் (மே.மா.) | 12.57 | 3,000,000 |
| பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் (மே.மா.) | 15.84 | 3,465,000 |
| பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகம் பகுதி II | 3.27 | 650,000 |
| அரச அச்சுகூட்டுத்தாபனம் | 0.42 | 240,000 |
| தபால்அலுவலகம் | 0.43 | 800,000 |
| மொத்தம் | 100 | 24,130,500 |

மூலம் – நிர்வாகப் பிரிவு

## விளக்கப்படம் 04



மேற்கூறப்பட்ட அனைத்து அலுவல்களும் அரச சட்டங்கள் மற்றும் கொள்கைகளை மீறாது நேர்மையான முறையிலும் வெளிப்படைத்தன்மையுடனும் மேற்கொள்ளப் படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்தி ஆய்வு செய்தற் பொருட்டு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

மேலும், அரச அலுவலர்களுக்கான ஓய்வூதியம் தொடர்பிலான கொள்கைகளை இயற்றுதல் மற்றும் அவற்றை அமுல்படுத்துவதால், பயனாளிகளுக்குக் கிடைக்கும் நன்மைகளை உறுதிப்படுத்தும் பொருட்டு முகாமைத்துவத்தில் பங்களிப்புச் செய்தல் ஆகியவையும் கணக்காய்வுப் பிரிவின் கடமைகளாகும். அத்துடன் வளங்கள் சரியான முறையில் சிறப்புறப் பயன்படுத்தப் படுகின்றனவா என்பதையும், உரிய சுற்று நிருபங்களிற்கமைவாக நிதிக்கட்டுப்பாடு மேற்கொள்ளப்படுகிறதா என்பதையும் உறுதிப் படுத்துவதற்கும் இப்பிரிவால் கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கமைய ஓய்வூதியத் திணைக்களம் பல்வேறு பிரிவுகளின் கீழ் பல்வேறு கடமைகளை பிரித்தளித்ததனூடாக, சிக்கலான ஓய்வூதியக் கொடுப்பனவுச் செயல் முறையை எளிமையாக்கி விரைவாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் திருத்தமாகவும் மேற்கொண்டு வருகிறது.

## 02. புதிய அறிமுகம்

### 02. I. தகவல் தொழில்நுட்ப புதிய அணுகல்

விதவைகள் / தபுதாரர் / அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் அனைத்து அரச ஊழியர்களும் பதிவு செய்யவேண்டியது கட்டாயமாக இருப்பதால் இதற்கேதுவாக இப்பதிவுகளிற்காக 2016 ஆம் ஆண்டில்ஒரு இயங்கலை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கமையவாக இயங்கலையில் பதிவுகளை மேற்கொண்ட அரச அலுவலர்களுக்காக ஒரு டிஜிடல் தகவல் சேமிப்பான் உருவாக்கப்படுவதுடன் அவ்வாறான டிஜிடல் தகவல் சேமிப்பான் முந்தைய பதிவுகளுக்கு எக்காலத்திலும் உருவாக்கப் பட்டிருக்கவில்லை. ஓய்வூதியத் திணைக்களத்தால் உருவாக்கப்படும் டிஜிடல் தகவல் சேமிப்பான் ஊடாக ஓய்வூதியர் சமுதாயத்திற்கும் திணைக்களத்திற்கும் ஆண் /பெண் அரச அலுவலர்களுக்கான வசதிகளை இனங்காணமுடிந்துள்ளதுடன், அதற்கமைய இயங்கலையில் பதியப்படாத அரச அலுவலர்களை இயங்கலையில் மீள்-பதிவிடலை மேற்கொள்ளும் நடவடிக்கை 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி விதவைகள் / தபுதாரர் / அநாதைகளின் ஓய்வூதிய மீள்பதிவிடலின் பொருட்டு புதிய மென்பொருள் வடிவமைக்கப்பட்டதுடன் அதனையடுத்து விதவைகள் / தபுதாரர் / அநாதைகளின் பதிவின் மூலம் டிஜிடல் தகவல் சேமிப்பானை உருவாக்க அனுமதி வழங்கக் கூடியதாக இருக்கும். மேலும் அரச ஆண்/ பெண் அலுவலர்கள் தமது விதவைகள் அநாதைகள் ஓய்வூதியக் கோவை கொண்டுள்ள குறைபாடுகளை ஒருங்கிணைத்து தீர்வைப் பெறுவதற்கு சந்தர்ப்பத்தை பெறுகின்றனர்.

அத்துடன் எதிர்வரும் வருடங்களில் ஓய்வுநிலையை எதிர்பார்த்திருக்கும் அரச அலுவலர்களின் திருத்தமான புள்ளிவிபர ஆவணத்தையும் பராமரிக்கும் திறன் உருவாக்கப்படுவதுடன் வரவு செலவுத் திட்டத்தை திருத்தமாக உருவாக்க இது வழிவகுக்கும்.

இக் கருத்திட்டத்தை வெற்றிகரமாக உருவாக்கும் நோக்கில் பிரதேச செயலகங்கள் மற்றும் ஓய்வூதியத் திணைக்களம் ஆகியவற்றிற்கு நூறு மடிக்கணனிகளை ஓய்வூதியத் திணைக்களம் நன்கொடையாக வழங்கியுள்ளது.

பொதுச் சேவை நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களையும் இயங்கலையில் பதிவு செய்யும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள புதிய தகவல் தொழில்நுட்ப தொகுதி இதுவரை இணையத்துடன் இணைக்கப்படவில்லை. அதனில் பொதுச் சேவை நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களை இயங்கலையில் பதிவு செய்யும் திறனும் அங்கத்தவர்களது தகவல்களை டிஜிடல் தகவல் களஞ்சியமாக பராமரிக்கும் திறனும் 2017 ஆம் ஆண்டின் இறுதி தொடக்கம் உருவாக்கப்படுகிறது.

மேலும் காசோலைகளைப் பற்றிய தகவல்களை இயங்கலையினூடாகப் பெறமுடிகிறது. அதன்படி தகவல் தொகுதியில் பொதுச் சேவை நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களது பதிவு மற்றும் கொடுப்பனவு ஆகியவற்றின் விபரங்கள் இற்றைப்படுத்தி பராமரிக்கும் திறன் கிடைத்துள்ளது. இது 2017 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்தே செயல்படுத்தப்படுவதுடன் ஒவ்வொரு அலுவலர்களிடமிருந்தும் அவர்கள் கடமையாற்றும் நிறுவனங்களூடாக அவர்களது சம்பளத்தில் மாதாந்தம் அறவிடப்படும் பங்களிப்பு காசோலை விபரம் தகவல் தொகுதியில் உள்ளீடு செய்யப்படும். இவ்வாறான நடைமுறையினால், எதிர்காலத்தில் அங்கத்தவர்களுக்கு அவர்களது இறுதி வங்கிக் கூற்றறிக்கையை வழங்க முடிவதுடன் மாதாந்த பங்களிப்பு விபரத்தையும் பெறும் சாத்தியம்

ஏற்பட்டுள்ளது. இதனால் நன்மைகள் வழங்கும் போது அனைத்துக் கட்டணங்களையும் கண்காணிக்கும் வகையில், இச் செயல்முறையில் அதிக வசதி கிடைக்கிறது. இத்தொகுதியின் காரணமாக பதிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்கள் சார்பில் பங்களிப்பு நிதியை வைப்புச் செய்த நிறுவனங்களின் எண்ணிக்கையை இலகுவில் கண்டறிய முடியும். அத்துடன் நன்மைக்கு உரித்துடையோருக்கு நன்மைகளை வழங்கும் போது உயர் திறனையும் எதிர்பார்க்க முடியும். அங்கத்தினர் கடமையாற்றும் நிறுவனத்தால் பதிவு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதால், அங்கத்தவர்களுக்கு கடிதங்களை அனுப்பி அறிவித்தல் வழங்க வேண்டிய சிக்கலான செயல்முறையில் இருந்து இது விடுபட வழிவகுக்கும்.

ஏற்கனவே காணப்பட்ட பதிவிடல் செயல்முறையை பயன்படுத்தி பதிவு செய்யும் போது அதன் மூலம் போதிய பயனை பெற முடியாதிருந்தது. இம்முறையில், தன்னியக்கமாக துரிதமாகவும் சரியானதாகவும் தொடர்புடைய தகவல்களைப் பெறுவதற்கான திறன் காணப்படவில்லை. ஆகையால், இப் புதிய முறையானது மிகவும் திறனுடையதும் பயன் மிக்கதுமான சேவை ஆகும்.

அத்துடன் மரணப் பணிக் கொடை, விதவைகள், தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு மீள்கொடுப்பனவு, ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்கல் மற்றும் கொடுப்பனவுகள் போன்ற பல்வேறு செயல்முறைகளிற்கும் கூட புதிய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதுடன் இப்புதிய அமைப்புத் தொடர்பில் தர ஆய்வின் பின்னர் பிரதான தகவல் தொழில்நுட்ப அமைப்புடன் இணைக்கப்படவுள்ளது.

திணைக்களத்தில் மேற்கூறப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பயன்பாட்டினூடாக ஒரு பயனுள்ள சேவையை வழங்குவதற்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தியை மேற்கொள்ளும் அதேநேரம் உயர் மின்னழுத்த சேவையகம் (server) மற்றும் இணைய இணைப்பு ஆகியவையும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

## 02. II.விடயம் தொடர்பில் புதிய அணுகல்

ஓய்வூதிய திணைக்களம், பிரதான துறையில் பல்வேறு மாற்றங்களை செய்து எளிமையான சேவையினூடாக பயனுள்ள சேவையை வழங்குவதற்கு இவ்வருடத்தில் ஒரு இலக்கை அமைத்துள்ளதுடன் மேற்கூறப்பட்டதன் விளைவாக ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களால் ஒவ்வோர் பிரிவுகளிற்கும் அவற்றின் வசதிக்கேற்ப அனைத்து செய்முறைகளும் எளிமையானதாக்கப்பட்டுள்ளது

அதன்படி விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய விடயப் பரப்புடன் தொடர்புடைய பணிக்கொடை கொடுப்பனவுச் செயல்முறையுடன் சம்பந்தப்பட்ட ஒரே கோவை வெவ்வேறு பிரிவுகளூடாக பரிமாற்றப்படுவதால் ஏற்படும் தாமதங்களைக் குறைக்க முடிந்துள்ளது.

மேலும், மனித வளங்கள் சிறப்புற பராமரிப்பதற்காக ஏற்கனவே இருந்த நடைமுறைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. விதவைகள், தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவு மேற்கொள்கையில் பிரச்சனைகள் அற்ற மற்றும் பிரச்சனைகள் உள்ள தனித் தனிக் கோவைகளை பெயரிட்டு விடய அலுவலருக்கு வழங்குவதனூடாக கணிப்பீடுகள் செய்யப்படுவதால், பிரச்சனைகளைக் கொண்ட கோவைகள் சேகரிக்கப்பட்டு அப் பிரச்சனைகளைக் தீர்த்து வைக்க கணிசமான நேரம் செலவிடப்பட்டது. இவ்வாறாக சிதைவடைந்த கோவைகளின் தொகுப்பால விடயத் தொடர்புடைய அலுவலர்கள் அதிருப்தி அடைந்தனர். ஆகையால் , சிக்கல்களுள்ள மற்றும் அற்ற கோவைகள் ஒன்றாக்கப்பட்டு விடயத்

தொடர்புடைய அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது. அதன்பால், அக்கோவைகளைக் கையாள்தல் மற்றும் முடிவெடுத்தல் வினைத்திறனுடன் காணப்பட்டது. அதே நேரத்தில், மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் கடமையாற்றும் அலுவலர்களுக்கு கோவைகள் வழங்கப்பட்டதன் காரணமாக அலுவலரால் பெறப்பட்ட கோவைகளில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. எனினும் கடமை சமமாக பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் விடயப் பொறுப்புடைய அலுவலர்களிடம் சேகரிக்கப்பட்ட கோவைகளில் பல எண்ணிக்கையான திறன் சிக்கல்கள் எழுந்தன. அலுவலர்களிடையே சமமாக கோவைகள் பகிர்ந்தளிக்கப்படுகையில் இத்தகைய தடைகள் தவிர்க்கப்படுகின்றன.

மேலும் தபால் பிரிவினூடாகப் பெறப்படும் அனைத்துக் விண்ணப்பங்களுக்கும் தற்காலிக இலக்கமொன்று வழங்கப்பட்டதுடன் அவ்வாறு வெவ்வேறு விண்ணப்பங்களுக்கு வழங்கப்படும் தற்காலிக இலங்கங்களூடாக பொருத்தமான ஓய்வூதியத் திட்டத்தை இனங்காண்பது கடினமாவதுடன் இந்நோக்கத்திற்காக புதிய வகைப்படுத்தப்பட்ட இலக்கங்களாக 13 இல் இருந்து 26 வரையான இலக்கங்கள் வழங்கப்பட்டன. அதனால் விண்ணப்பத்தில் சரியான விடயத்தை அடையாளப்படுத்த முடிந்தது.

கணக்குப் பிரிவினால் 5 வருடத்திற்கு முந்தைய பதிவேடுகளை ஸ்கான் செய்து தரவுத்தளத்தில் சேமித்த பின்னர் அவற்றை அப்புறப்படுத்தும் கருத்திட்டம் 2017 இல் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அதனால் தேவையற்ற பதிவேட்டுச் சேகரிப்புக்களை தவிர்க்க முடிந்தது.

## 03. மேம்படுத்தல்

### 03. I. தகவல் தொழில்நுட்ப மேம்பாடு

ஓய்வூதியத் திணைக்களத்தின் ஓய்வூதிய முகாமைத்துவத் தொகுதியை அபிவிருத்தி செய்வதற்கும், வழிநடத்தவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன இச் செயற்பாடு 2016இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2017 இல் புதிய பரிணாமத்திற்குச் இட்டுச் சென்றது. அதனால் மீளச் சேவைக்கு இணைந்துள்ள ஆயுதப்படை அங்கத்தவர்களது ஓய்வூதியத்தை இயங்கலையில் மீள்பதிவு செய்வதற்கு ஓய்வூதிய முகாமைத்துவத் தொகுதி தரமுயர்த்தப்பட்டது. அதனால் அவ்வலுவலர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுச் செயல்முறையானது துரிதமாகவும் திறனுடனும் மேற்கொள்ளப்படுகிறது.



மூலம் – ஊடகப் பிரிவு

அதற்கு மேலதிகமாக, நீதித் துறையினரால் இயங்கலையில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பில் எழும் பிரச்சனைகளுக்கான தீர்வுகளை தரமுயர்த்தப்பட்ட தகவல் தொழில் நுட்பத்தொகுதி வழங்குகிறது.

மேலும் , அலுவலக இணையத் தளத்தை இற்றைப்படுத்துவதற்கும், மாற்றங்களை மேற்கொள்ளவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் தரவுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் திணைக்களத்திற்கு அப்பால் ஓர் காப்புப்பிரதி தொகுதியை (backup system) பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஓய்வூதியர்கள் மற்றும் அரச அலுவலர்களது விதவைகள், தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய அங்கத்துவப் பதிவுக் கோவைகள் அனைத்தும் திணைக்களத்தின் பதிவேட்டறையில் பராமரிக்கப்பட்டு வருவதுடன் இவற்றின் பாதுகாப்பிற்காக பெரிய அளவிலான இடப்பரப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ 15 இலட்சம் விதவைகள், தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய பதிவுக் கோவைகள் திணைக்கள பதவேட்டறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதற்காக 10,000 சதுர மீற்றர் பரப்பளவு ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கு அப்பால் 5 இலட்சம் கொடைப் பத்திரங்கள் வழங்கப்பட்ட ஓய்வூதியர்களது கோவைகளும் இப்பதிவேட்டறையில் பேணப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டில் பதிவேட்டறையில் உள்ள பதிவேடுகளை ஸ்கான் செய்து பாதுகாக்கும் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் ஏறத்தாழ 4 இலட்சம் கொடைப் பத்திரங்கள் ஸ்கான் செய்யப்பட்டும் உள்ளன.

### 03. II. விடய அடிப்படை செயல்முறை மேம்பாடு

ஓய்வூதிய திணைக்களத்தின் முக்கிய நோக்கை அமுலாக்கும் போது அடையாளம் காணப்பட்ட பலவீனங்கள் மற்றும் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு இச்செயல்முறை அபிவிருத்தி செய்யப்பட்டது. அதற்கமைய மரணப் பணிக்கொடை

கொடுப்பனவுக்கான தொகுதி தரமுயர்த்தப் பட்டதுடன் பயனுறு சேவையை வழங்கும் நோக்கில் அத்தொகுதி அபிவிருத்தி செய்யப்பட்டது. பயங்கரவாத நடவடிக்கைகளால் இறந்த அலுவலர்களின் அல்லது ஓய்வு பெற்று ஒரு வருடத்தினுள் இறந்த அலுவலர்களின் மரணப் பணிக்கொடை கொடுப்பனவு இலக்கம் அவர்களுக்கு மரணப் பணிக் கொடை வழங்கும் போதான திகதிக்கு ஏற்பவே தீர்மானிக்கப்படுவதுடன் 2017 ஆம் ஆண்டில் PD 05 விண்ணப்பத்தின் பிரகாரமே தரவு தளத் தொகுதியால் இலக்கம் வழங்கப்படுகிறது.

அத்துடன் 2017 ஆம் ஆண்டில் அரச நிலுவைகளை பணிக் கொடையில் இருந்து அறவிடும் செயல்முறையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. முந்தைய செயல் முறைக்கமைய மாகாணசபை நிறுவன அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட்ட நிலுவைகள் அம்மாகாணசபைகளுக்கு காசோலையாகவும் மத்திய அரசு நிறுவன அலுவலர்களின் நிலுவைகள் நிதி ஏற்பாட்டுக் கடிதங்களாகவும் அனுப்பி வைக்கப்பட்டன. மேற்கூறப்பட்ட செயல்முறையை ஒழுங்காக்கும் நோக்கில், பணிக் கொடை வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் அவ்வலுவலர் கடமையாற்றும் நிறுவனம் மாகாண சபை எனின் அந்நிறுவன அலுவலக வங்கிக் கணக்கான இலங்கை வங்கி , மக்கள் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை அலுவலர் மத்திய அரச நிறுவனமாயின் அரச நிலுவைகளை பணிக்கொடையில் இருந்து விடுவிக்க இணையத்தளத்தினூடாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2017 ஆம் ஆண்டின் இறுதியில் ஓய்வூதிய முகாமைத்துவத் தொகுதிக்கு கணிப்பிடல் செயல்முறையை பதிவிடும் நோக்கில் அடிப்படை தொகுதி வடிவமைப்பு திட்டமிடப்பட்டதுடன் அது 2018 இல் நிறைவு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் வெளிநாட்டு ஓய்வூதியக் கொடுப்பனவுப் பொறிமுறை அபிவிருத்தியில் வெளிநாட்டு ஓய்வூதியக் கிளையினால் அதன் திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய 2016 இல் பதிவேட்டறை உருவாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு 2017ஆம் ஆண்டில் நிறைவுக்கு வந்ததுடன் எக்கோவையையும் இலகுவில் கண்டறிய கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும் எதிர்காலத்தில் நிறப்பட்டி உதவியுடன் தற்காலிக மற்றும் நிரந்தர கோவைகளை இனங்காணுவதற்காக பொருத்தமான தொகுதியொன்று உருவாக்க எதிர்பார்க்கப் பட்டுள்ளது. பதிவேட்டறையில் உள்ள அனைத்து கோவைகளுக்கும் தரவுத் தளத் தொகுதி உருவாக்கப்பட்டுள்ளதுடன் அவை கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி பதிவேட்டறையில் உள்ள கோவைகளின் இலக்கம், அமைவிடம் ஆகியவற்றை கண்டறியும் வசதி கிடைக்கிறது. அத்துடன் உயிர்வாழ்ச் சான்றிதழினூடாக வெளிநாட்டு ஓய்வூதியர் தொடர்பில் தேவைப்படும் போதிய தகவல்கள் பெற முடிவதில்லை என்பது அவதானிக்கப் பட்டுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டில் புதிய மாதிரி விண்ணப்பப் படிவம் ஒன்று வெளிநாட்டு ஓய்வூதியர் தொடர்பில் தேவையான விபரங்களை பெறுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. உயிர்வாழ்ச் சான்றிதழில் தேசிய அடையாள அட்டை இலக்கம், கடவுச் சீட்டு இலக்கம் மற்றும் வழங்கப்பட்ட மற்றும் காலாவதித்திகதி ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவற்றை உள்ளடக்குவது தொடர்பிலும், ஒவ்வொரு வருடமும் குறித்த காலப்பகுதிக்குள் உயிர்வாழ்ச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டிய தேவை தொடர்பிலும் விழிப்புணர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2018 இலிருந்து

உயிர்வாழ்ச் சான்றிதழை சமர்ப்பித்த ஓய்வூதியர்களுக்கான உறுதி சிட்டை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக, வெளிநாட்டில் வதியும் ஓய்வூதியர் சமூகம் இங்கு வருகை தருகையில் தமது பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு 2017 ஆம் ஆண்டில் இருந்து நாளாந்தம் அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 மணி வரை ஓர் அலுவலர் வெளிநாட்டு ஓய்வூதிய உதவி மேசையில் சிறப்புச் "அ" தரசேவையை வழங்கும் நோக்கில் அனுப்பப்படுகிறார்.

## 03. III. பௌதீக விரிவாக்கம்

ஓய்வூதியர்கள் சமுதாயம் பாரம்பரிய முறையில் இருந்து ஓய்வூதியத் திணைக்களத்தின் நவீன தொழல்நுட்ப வளர்ச்சிப் போக்குடன் காணப்படும் நவீனத்துவத்திற்கு, தமது விவகாரங்களை மாற்றிக் கொண்டுள்ளனர். அதற்கமைய இலங்கையின் வெவ்வேறு பகுதிகளில் இருந்து வேறுபட்ட தேவைகளுடன் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு வருகை தரும் ஓய்வூதியர்களுக்கு ஒரு குடையின் கீழ் அவர்கள் தேவைகளை பூரணப்படுத்தும் சேவையை வழங்கும் நோக்கில் அரச வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்களைக் கொண்ட உதவி மேசைத் தொகுதியொன்று உருவாக்கப் பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக திணைக்கள அலுவலர்களின் வரவுப் பதிவை திருத்தமாக மேற்கொள்ளும் நோக்கில் கை இரேகைப் பதிவு இயந்திரத்தில் காணப்பட்ட தவறுகளை தவிர்க்கும் நோக்கில் நவீன தொழில் நுட்பத்துடனான புதிய கை இரேகைப் பதிவு இயந்திரம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதுடன் விடுமுறை முகாமைத்துவத் தொகுதிக்கென மென்பொருள் ஒன்று அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

ஓய்வூதியர்களுக்கு, வசதியான மற்றும் சுமூகமான சேவையை வழங்கும் நோக்கில் "சத்காரப் பியச" வளாகம் புதுப் பொலிவுடன் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் முன் பிரதான வாயிலின் பக்கம் அமைந்துள்ள பழைய கூரை மற்றும் கட்டடப் பகுதி அகற்றப்பட்டு புதிய நவீன கூரை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் களனி விருந்தினர் விடுதியில் ஏற்பட்ட மின்சாரப் பற்றாக்குறையால் விருந்தினர்களுக்கு ஏற்பட்ட சிரமத்தைப் போக்கும் நோக்கில் புதிய மின்பிறப்பாக்கியொன்று நிறுவப்பட்டுள்ளது.



மின் பிறப்பாக்கி இயந்திரம் – களனி விடுமுறை விடுதி
மூலம் – ஊடகப் பிரிவு

# 04. சாதனைகள்

## 04. I. சத்காரப் பியச

ஒய்வூதியத் திணைக்களத்துடன் ஆறு இலட்சம் ஒய்வூதியர்கள் "சத்காரப் பியச" இனூடாக இணைக்கப்படுகின்றனர். ஆகையால், ஒய்வு பெறும் ஒவ்வொரு அரச அலுவலரும் ஒய்வூதியத் திணைக்களத்தின் சத்காரப் பியசவிற்கு கட்டாயமாக ஒரு தடவை சமூகமளிக்க வேண்டும். ஒய்வு பெற எதிர்பார்த்துள்ள ஓய்வூதியருக்கு ஓய்வூதியத் திணைக்களத்தால் ஓய்வூதிய இலக்கம் வழங்கப்பட்ட பிற்பாடு சத்காரப் பியசவிற்கு சமுகமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்படும். இக் கருத்தாக்கம் அண்மையில் 2015 ஆம் ஆண்டில் ஓய்வூதியத் திணைக்களத்தால் வடிவமைக்கப்பட்ட கருத்தாக்கமாகும். ஓய்வு பெற்ற வாழ்க்கையில் இணைந்துகொள்ள ஆர்வத்துடன் வருகை தரும் ஓய்வூதியர்களுக்கு மதிப்புமிகு சேவை வழங்கப்பட்டதுடன் அவர்களது சிக்கல்களுக்கான தீர்வுகளும் விரைவாகவே வழங்கப்பட்டது. இதன்படி ஓய்வூதியர் ஒரு நேர்முகத் தேர்வில் பங்குபற்றுவதுடன் கொடைப் பத்திரம் அடங்கலாக ஓய்வூதியர் மரணிக்கும் சந்தர்ப்பத்தில் வாழ்க்கைத் துணைக்கான ஓய்வூதிய உரித்து மற்றும் 26 வயதிற்குக் குறைந்த வயதுடைய பிள்ளைகள் மற்றும் ஊனமுற்ற பிள்ளைகள் இருப்பின் அவர்களது தகவல்களும் பதிவிடப்படும். விதவைகள் அநாதைகள் ஓய்வூதியக் கோவை ஸ்கான் செய்த பின்னர் ஓய்வூதியரிடம் சமர்ப்பிக்கப்படுவதுடன் சர்வதேச தரத்திலான ஓய்வூதிய அடையாள அட்டையும் வழங்குவதற்கான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகிறது. 2017 ஆம் ஆண்டில் 120 ஓய்வூதியர்கள் நாளொன்றிற்கு அழைக்கப்படுகின்றனர். 2016 ஆம் ஆண்டில் இவ்வாறு நாளாந்தம் அழைக்கப்பட்ட ஓய்வூதியர்களின் எண்ணிக்கை 50 ஆகும். அதற்கமைய 2017 ஆம் ஆண்டில் இவ்வெண்ணிக்கையை இரண்டு மடங்கால் அதிகரிக்க திணைக்கள நிர்வாகம் தீர்மானித்ததுடன் 2018இல் இவ்வெண்ணிக்கை 160 ஆக உயர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.



மூலம் – ஊடகப் பிரிவு

சத்காரப் பியசவிற்கு வருகை தரும் ஓய்வூதியர்களுக்கு சர்வதேச தரத்திலான இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்கும் பொருட்டு கை இரேகைப் பதிவு பெறப்படுவது கட்டாயமானதாவதுடன் முறையான நேர்முகத் தேர்வை விரைவுபடுத்தும் நோக்கில் மூன்று கை இரேகைப் பதிவு இயந்திரங்கள் 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன. அதற்கமைய கை இரேகைப் பதிவு பெறப்படுவது விரைவுபடுத்தப்பட்டுள்ளதுடன் ஓய்வூதியர்களுக்கு அவர்களது சுய விபரங்கள் அடங்கிய சர்வதேச தரத்திலான இலத்திரனியல் அடையாள அட்டையை தாமதமின்றி வழங்கும் திறனும் பெறப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற வாழ்க்கையில் இணைந்து கொள்ளும் ஓய்வூதியர்களுக்கு மதிப்புமிகு சேவை வழங்கும் பிரிவு "சத்காரப் பியச" ஆகும். ஆகவே அப்பிரிவுக்கு சிறந்த அனுபவமுள்ள சினேக பூர்வமான அலுவலர்களை திணைக்கள நிர்வாகம் நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன் கூட்டுறவு மனப்பான்மையுடன் சேவையாற்றும் மனப்பாங்கை

அலுவலர்களுக்கு மேம்படுத்த விசேட பயிற்சி நெறிகளை வழங்குவதனூடாக வினைத்திறனான சமூக சேவை மனப்போக்கை மேற்கூறிய நோக்கிற்காக திணைக்களம் தக்கவைத்துக் கொள்ள முடிந்தது. 2017 ஆம் ஆண்டில் Dialog தனியார் நிறுவனத்துடன் இணைந்து வாடிக்கையாளர் சேவைப் பயிற்சிப் பட்டறை மற்றும் தலைமைத்துவப் பயிற்சிநெறி ஆகியவை வழங்கப்பட்டதனூடாக அவர்களது திறனை மேம்படுத்த சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

அதற்கமைய ஓய்வூதியர்களுக்கு சத்காரப் பியசவினூடாக மேம்படுத்தப்பட்ட பயனுறுதி, மற்றும் திறன் மிக்க சேவைகளை வழங்குவதனூடாக 2017 ஆம் ஆண்டில் பின்வரும் சாதனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் ஓய்வு பெற எதிர்பார்த்துள்ள 23,303 ஓய்வூதியர்கள் சத்காரப் பியசவினால் நடாத்தப்படும் நேர்முகத்தேர்விற்கு (PMS நேர்முகத்தேர்வு) சமூகம் தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏனைய நேர்முகத்தேர்வுகள் 3,099. அதனடிப்படையில் மொத்த நேர்முகத்தேர்வுகளிற்கான அடைவு மட்டம் 26,402.

### 04. II. பொதுமக்கள் தினம்

பொது மக்களது தேவைகளுக்கும் பிரச்சனைகளுக்கும் தீர்வு காணும் நோக்கில் அரச நிறுவனங்களில் “பொதுமக்கள் தினம்” அமுல்படுத்தப்படுவதுடன் 2017 ஆம் ஆண்டில் ஒரு புதிய வடிவத்துடனும் தொலை நோக்குடனும் “பொதுமக்கள் தினம்” இத்திணைக்களத்தால் அமுல் படுத்தப்பட்டுள்ளது. இப்புதிய செயல்முறையானது அரச சேவையில் இருந்து ஓய்வுபெறும் அலுவலர்களின் பாதுகாப்பு மற்றும் நலநோன்பு ஆகியவற்றை வழங்கும் நிறுவனமான இத்திணைக்களத்தின் அந்த அந்த விடயத்துடன் தொடர்புடைய பதவி நிலை அலுவலர்ளை அப்”பொதுமக்கள்” தினத்தில் நேரடியாக சந்தித்து ஓய்வூதியத்தில் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கான தீர்வுகளை பெறும் வசதியை வழங்குகிறது. இப்புதிய நடைமுறை 2017.02.15 ஆம் திகதியில் இருந்து நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் தினத்தில் பதவிநிலை அலுவலர்ளை ஒரே இடத்தில் ஓய்வூதியர்கள் சந்திக்க முடியமென்பதுடன் அப்பொழுது அவர்களது பிரச்சனைகளை நேரடியாக திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு கொண்டு செல்லவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. புதிய இச்செயல்முறையால் தொலை தூரத்தில் இருந்து வருகை தரும் ஓய்வூதியர்களுக்கு அவர்களது தேவைக்கேற்ப தொடர்புடைய விடய அலுவலர் மற்றும் பிரிவுத்தலைவர்களுடன் நேரிடையாக தொடர்பு கொள்வதால் பொருத்தமான மற்றும் திருப்தியான சேவையை அக்கணமே சம்பந்தப்பட்ட அலுவலர்கள் வழங்கி ஓய்வூதியர்களது பிரச்சனைக்கு தீர்வு பெறமுடிந்தது.



மூலம் – ஊடகப் பிரிவு

அதற்கு மேலதிகமாக திணைக்களத்திற்கு வருகை தரும் ஊனமுற்ற ஓய்வூதியர்கள் தமது பிரச்சனைகளை தீர்த்தற் பொருட்டு திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவுகளிற்கும் ஒவ்வோர் தளமாக செல்லும் சிரமத்தைத் தவிர்த்து கேட்போர் கூடத்திலேயே தமக்கான

அனைத்துத் தேவைகளையும் தீர்க்க ஓய்வூதியத் திணைக்களம் சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

### 04. III. பொதுச் சாளரம்

ஓய்வூதியத் திணைக்களத்திடம் நன்மையைப் பெறும் ஓய்வூதியர் சமூகத்திற்கு உச்ச சேவையை வழங்கும் நோக்கில் சேவைத் தரத்தை மாற்றியமைத்து 2017 ஆம் ஆண்டில் "பொது மக்கள் தினம்" எனும் கருப் பொருளைத் தொடர்வதனூடாக பதவிநிலை அலுவலர்கள் நேரடியாக பங்குபற்றி அங்கு பெறப்படும் பிரச்னைகளுக்கு ஏற்ப தீர்வுகளை வழங்க முடிந்தது. அதற்கமைய நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் ஓய்வூதியர்களது நலனைக் கருத்தில் கொண்டு உதவி மேசையூடாக புதன் கிழமைகள் மட்டுமல்லாது ஏனைய நாட்களிலும் உதவிப் பணிப்பாளர்கள் மற்றும் கணக்காளர்களைச் சந்திப்பதன் மூலம் அவர்களது பிரச்சனைகளுக்கு உடனடித் தீர்வுகள் வழங்கும் சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டுள்ளது. திணைக்களத்தின் நிர்வாக அலுவலர்களின் கவனத்திற்கு இப்பிரச்சனைகளை எடுத்துச் செல்வதனூடாக அவ்விடயங்கள் தொடர்புடைய அலுவலரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படுவதுடன் தீர்வுக்கான செயல்முறை திணைக்களத்தால் விரைவு படுத்தப்பட்டு ஓய்வூதியர்களது பிரச்சனைக்கான தீர்வுகள் வெளிப்படையாகவும் திருத்தமாகவும் நியாயமாகவும் வழங்கப்படும்.

### 04. IV.உள்ளகக் கணக்காய்வு

ஓய்வூதியர் மற்றும் அவரது வாழ்க்கைத் துணை மற்றும் பின்னுரித்தாளர்களுக்கான நன்மைகளை வழங்கும் சந்தர்ப்பத்தில் வெளிப்படைத்தன்மையுடைய, திருத்தமான, தெளிவான நிதி மற்றும் நிறுவனத் தொகுதியை பராமரிப்பதற்கு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது திணைக்களத்திற்கு மிகப் பெரிய ஊன்று கோலாக உள்ளது. 2017 ஆம் ஆண்டில் 05 பிரதேச செயலகங்கள் உள்ளகக் கணக்காய்வு கிளையால் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. கடந்த வருடங்களில் 09 விசேட கணக்காய்வுகள் செய்யப்பட்டுள்ளதுடன் 37 திணைக்கள தரவுத் தொகுதிகளும் கண்காணிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 45 பொது முறைப்பாடுகளும் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன. 180 கோவைகள் தொடர்பில் அவதானிப்புகள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதுடன், ஆய்வுகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. 45 கோவைகளின் வர்க்க இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கங்களின் திருத்தத் தன்மை தொடர்பிலும் ஆய்வு மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ஐய வினாக்கள் மீதான ஆய்வின் மூலம் 10 இலட்சம் ரூபாவிற்கு மேலான நிலுவைகள் உள்ள 545 கோவைகள் மற்றும் சதுர இலக்கம் 59 இன் கீழான 1999 கோவைகள் ஆய்வு செய்யப்பட்டதுடன் தரவுகளை ஆய்வு செய்கையில் 1700 ஆயுதப் படை மற்றும் வான்படை ஓய்வூதியருக்கு மேலதிக கொடுப்பனவு செய்யப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி கண்டறியப்பட்டது.

2017 ஆம் ஆண்டு தொடர்பில், 05 பிரதேச செயலகங்களுக்கு, 9 தரவுத்தள தொகுதிகளுக்கு 39 விசேட கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 173 கோவைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தி உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் பிரதேச செயலகங்கள் மற்றும் தரவுத் தொகுதிகளில் ஆய்வுகளை மேற்கொண்டதன் மூலம் ரூபா 22,223,839.15 மேலதிக கொடுப்பனவாக வழங்கப்பட்டமை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் 10 இலட்சத்திலும் கூடிய நிலுவைத் தொகையினைக் கொண்ட கோவைகள்

ஆய்வுகளின் பின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் தவறாக நிலுவைகள் கணிப்பிடப்பட்ட 611 கோவைகள் திருத்தங்களை மேற்கொள்ளும் பொருட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. 10 இலட்சம் ரூபாவிலும் அதிகமான நிலுவைத் தொகை கொண்ட கோவைகளை ஆய்வு செய்கையில் திருத்தப்பட்ட மேலதிகக் கொடுப்பனவு 1.8 மில்லியன் ரூபா எனக் கண்டறியப்பட்டுள்ளது.

ஏனைய தொகுதியினூடான ஆய்வின் மூலம் மேலதிகக் கொடுப்பனவு 3,960,261,018 எனவும் விசேட ஆய்வின் மூலம் மேலதிக கொடுப்பனவு 4,153,482.78 எனவும் கண்டறியப்பட்டுள்ளது. பிரதம கணக்காளர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோருக்கு இம்மேலதிக கொடுப்பனவை சம்பந்தப்பட்ட ஓய்வூதியரிடமிருந்து மீட்டெடுத்தல் தொடர்பில் எடுத்து உரைக்கப் பட்டுள்ளதுடன் திணைக்களக் கொடுப்பனவுச் செயற்பாட்டின் வெளிப்படைத்தன்மையைப் பேணுவதற்கும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தனது பங்களிப்பை வழங்கி அவ்வாறான ஊழல் மேற்கொள்வோர் தொடர்பில் பிரதேச செயலகம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளலுக்கான விழிப்புணர்வை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

## 05. திறன் முகாமைத்துவம்

ஓய்வூதியத் திணைக்களமானது, ஓய்வூதியர் சமுதாயத்தினர் பொருளாதார ரீதியாகவும் சமூக மட்டத்திலும் திருப்தியான நிலையை அடைதலை முதன்மை நோக்காகக் கொண்டு திறனின் உச்சப் பயன்பாட்டை முகாமை செய்யும் ஓர் அரச நிறுவனமாகும்.

ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஓய்வூதியர் சமுதாயத்தினருக்கு சேமித்து வைத்துள்ள பெருந்தொகையான தகவல்களை நிர்வகிப்பதில் ஓய்வூதியத் திணைக்களம் ஒரு முக்கிய பங்கைக் கொண்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் தகவல் சேகரிப்பு, அமைப்பு, விநியோகம், புத்தாக்கங்கள் மற்றும் தொகுதியின் தொடர்ச்சியான வளர்ச்சி ஆகியவற்றை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 05. I. தகவல் தொழில்நுட்பத் தொகுதி முகாமைத்துவம்

நிறுவன அறிவு முகாமைத்துவத்தில் பெரும் பங்காற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவானது, முழு ஓய்வூதியர்கள் சமூகத்தின் மீதுமான மத்திய தரவுத் தளத்தை முகாமை செய்வதில் பெரும் பங்காற்றுகிறது.

விசேடமாக ஓய்வூதியத் திணைக்களத்தின் தொழில்நுட்பப் பிரிவின் கீழ் அனைத்துக் கணணிகளிலும் தவறுகளை நிவர்த்தி செய்யும் தரவுத் தொகுதி பராமரிக்கப் படுவதால் 2017 ஆம் ஆண்டில் அனைத்து ஓய்வூதிய கொடுப்பனவு செயல் முறையும் வினைத் திறனுடனும் உற்பத்தித் திறனுடனும் பராமரிக்கப்படுகிறது. ஓய்வூதியத் திணைக்களம் இயங்கலையினூடாக ஓய்வூதியப் பதிவு, புகையிரத ஆணைச்சீட்டு முன்பதிவு , விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய மீள்பதிவு போன்றவற்றிற்கு தற்போது பயன்படுத்தும் மென்பொருளை திணைக்களத்தின் தொழில் நுட்பப் பிரிவு தயாரித்துள்ளது. ஓய்வூதியத் திணைக்களக் கடமைகளை நிறைவேற்றும் நோக்கில் 25 மாவட்டச் செயலகங்களிலும் கடமையாற்றும் அலுவலர்கள் மற்றும் 331 பிரதேச செயலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு கணணிகளின் தகவல் தளத்தைக் கையாளும் திறனை உயர்த்தும் நோக்குடன் மேற்கூறப்பட்ட மென்பொருள் பாவனையின் மேம்பாட்டிற்காக காலத்திற்குக் காலம் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் ஓயவூதியர்களின் எண்ணிக்கை உயர்வாக உள்ள தலைமைக் காரியாலயம் மற்றும் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 54 பிரதேச செயலகங்கள் ஆகியவற்றிற்கு 100 மடிக்கணணிகள் வழங்கப்பட்டன.

அத்துடன், விடயத்துடன் தொடர்புடைய 3000 இற்கு மேற்பட்ட அரச நிறுவனங்களில் கடமையாற்றும் அரச அலுவலர்களை ஓய்வூதிய தரவுத் தளத்துடன் இணைத்துள்ளதுடன் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய மீள்பதிவு தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தினூடாக அறிவுறுத்தல்கள் வழங்கி தரவுத் தளத்துடன் வினைத் திறனான இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கூறப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் தவிர, தகவல் தொழில் நுட்பத்தின் அண்மைய கண்டுபிடிப்புகள் தொடர்பிலும் விழிப்புணர்வு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், திணைக்கள இணையத்தளத்தின் தகவல் தொழில் நுட்ப உதவி மேசையில் கையேடுகள் (IT HELP DESK) வெளியிடப்பட்டதுடன், இயங்கலைப் பதிவில் காணப்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்கும் பொருட்டு ஓய்வூதியத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும் அலுவலர் தீர்வைப் பெற்றுக் கொள்ள நேரடியிணைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

## 05. II. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நெறிகள்

ஓய்வூதியத் திணைக்களம் அறிவு முகாமைத்துவத்தில் மனித வளத்துடன் கொண்டுள்ள அறிவுக்கு உயர் முன்னுரிமை வழங்குவதுடன் திணைக்கள வளர்ச்சிச் செயல் முறைக்கு தமது பல்வேறு திறமையை பயன்படுத்துகையில் மேற்சொன்ன அறிவின் அபிவிருத்தி மற்றும் இற்றைப்படுத்துதலை மேற்கொள்ள எப்போதும் கவனம் எடுக்கப்பட்டது. அதற்கமைய 2017 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு தேவைகள் சார்ந்த பயிற்சி நெறி வாய்ப்புகள் 26 அலுவலர்களுக்கு வழங்கப்பட்டன. இது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும், மேற்படி கூறப்பட்ட பயிற்ச்சி நெறி நிகழ்ச்சித் திட்டங்கள் அரச சேவை சார்புடைய மற்றும் 6 இலட்சத்திற்கும் அதிகமான ஓய்வூதிய சமூகத்தினர் அடங்கலாக ஓய்வூதிய வாழ்கைக்கு அடியெடுத்துவைக்கும் அரச அலுவலர்களின் மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவுச் செயல்முறைகளில் முக்கிய பங்கை வகிக்கும் திணைக்கள அலுவலர்களுக்கும் பல்வேறு துறைகளில் விளக்கங்களையும் அறிவையும் விரிவாக்க ஒரு பெரும் பங்களிப்புச் செய்வதுடன், 2017 ஆம் ஆண்டில் தொலைநிலை கல்வி அலகின் ஊடாக பெறுகை முகாமைத்துவம் தொடர்பிலும் , தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தினூடாக ஒருநாள் பயிற்சி நெறியாக சுற்றுச்சூழல் உற்பத்தித்திறன் தொடர்பிலும், திறனபிவிருத்தி நிதியத்தால் தனிநபர் கோவையை பேணுதல் தொடர்பிலும், தேசிய வர்த்தக அபிவிருத்தி நிறுவனத்தால் அலுவலகக் கடிதங்கள் எழுதுதல் மற்றும் சிங்கள எழுத்து மொழிப் பயிற்சியும், தேசிய மனிதவள அபிவிருத்திப் பணியகத்தால் சைபர் பாதுகாப்பு பயிற்சி நெறியும், தொழில் நுட்பக் கற்கைகள் பயிற்சிகள் திணைக்களத்தால் சொத்து முகாமைத்துவப் பயிற்சியும், திறனபிவிருத்தி நிதியத்தால் பயிற்சி பெற்ற அலுவலர்களை உருவாக்கும் இரண்டுநாள் பயிற்சிப் பட்டறையும் அனுமதிக்கப் பட்டதனூடாக திணைக்கள அலுவலர்களுக்கு அவர்களது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அறிவை வளர்ப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

ஓய்வூதியத் திணைக்களத்தின் மனித வள திறன் மற்றும் அறிவைப் பெருக்குவதற்கு பல்வேறு துறைகளில் உள்ளூர் மற்றும் சர்வதேசப் பயிற்சி நெறிகளும் முக்கிய பங்கை வகிப்பதுடன் இதனூடாக பொருளாதார மற்றும் சமூகமட்டத்தில் ஓய்வூதியர்களைத் திருப்தியானவர்களாக அர்ப்பணிப்புடன் உருவாக்க வழி வகுத்துள்ளது. அறிவு முகாமைத்துவத்தில் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு மேற்குறிப்பிட்ட சர்வதேசப் பயிற்சி நெறிகளுக்கான சந்தர்ப்பம் அப்பயிற்சி நெறிகளிற்கு பொருத்தமான தொடர்புடைய அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது. 2017ஆம் ஆண்டில் பொருத்தமான அலுவலர்களுக்கு அவர்களுக்கு தொடர்புடைய துறையில் வெளிநாட்டுப் பயிற்சி நெறிகளுக்கான சந்தர்ப்பங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

திணைக்கள அலுவலர்கள் தை மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை மலேசியாவிற்கு கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர். மாசி மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரையான இரண்டு நாட்களுக்கு அபிவிருத்தி இலக்கை அடைவதற்கான நிதி சமூகப் பாதுகாப்பு தொடர்பில் நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறையில் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் ஓய்வூதியத் திணைக்களத்தைப் பிரதிநிதிதுவப்படுத்தி கலந்து கொண்டார். ஆனி மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை இந்தியாவில் நடாத்தப்பட்ட பொது நிர்வாக மற்றும் அபிவிருத்திப் பயிற்சிப் பட்டறையில் பிரதம கணக்காளர்

கலந்து கொண்டதுடன் ஆனி மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை மலேசியாவில் நடாத்தப்பட்ட திறன் அபிவிருத்திப் நிகழ்ச்சித்திட்டத்தில் பணிப்பாளர் (ஒழுங்மைப்பு மற்றும் அபிவிருத்தி) ஓய்வூதியத் திணைக்களத்தைப் பிரதிநிதிதுவப்படுத்தி கலந்து கொண்டார். மேலும் ஆவணி மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை தாய்லாந்தில் நடாத்தப்பட்ட பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ தீர்மானம் எடுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தில் கணக்காளர் ஒருவரும் ஓய்வூதியத் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டார்.

சர்வதேச மற்றும் உள்ளூர் பயிற்சி நெறிகளினூடாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட அனுபவம் மற்றும் அறிவு ஓய்வூதிய சமூகத்திற்கு வழங்கும் சேவையில் பயனுறுதி, மற்றும் செயல்திறனை உயர்த்துவதுடன் மேலும் மேற்கூறப்பட்ட அறிவு திணைக்களத்தின் தொடர்ச்சியான அபிவிருத்திக்கும் முழு அரச சேவைக்கும் தொடர்ந்தும் பயனை வழங்கும்.

### 05. III. வெள்ளிக் கிழமை கருத்துக்களம்

திணைக்கள அலுவலர்களின் திறமையை வளர்க்குமுகமாக கலை, இலக்கியம் மற்றும் பொழுதுபோக்கு ஆகிய பல்வேறு துறைகளில் அவர்களது பங்குபற்றுதலுடன் விடயம் தொடர்புள்ள உளவள ஆலோசனைகளை மையமாகக் கொண்டு ஓய்வதியத் திணைக்களம் ஒரு விசேட எண்ணக் கருவை உருவாக்கியுள்ளத.

இது அறிவு மற்றும் பொழுது போக்கை உயர்த்தும் முகமாக வேறுபட்ட துறைகளில் உள்ள அறிவுஜீவிகள், வல்லுநர்கள், முக்கிய நபர்கள் மற்றும் கலைஞர்கள் போன்ற திறனுள்ள வளவாளர்களது பரந்த அறிவு மூலம் விரிவுரைகள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் பொழுது போக்கு ஆகியவை அடங்கலாக வெவ்வேறு கோணத்தினூடாக திணைக்கள அலுவலர்களின் திறனை உயர்த்தும் ஒரு அறிவு முகாமைத்துவக் கூறாகும்.

2017 ஆம் அண்டில் வெள்ளிக் கிழமை கருத்துக்கள நிகழ்ச்சித் திட்டத்தில் பல புத்தி ஜீவிகளின் பங்களிப்பு திணைக்களத்தால் பெறப்பட்டதுடன் மாதத்திற்கு ஒரு நிகழ்ச்சித் திட்டமென திட்டமிடப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் 8 வெள்ளிக் கிழமை கருத்துக்கள நிகழ்ச்சித் திட்டங்கள் திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவினாலும் ஒழுங்கமைக்கப்பட்டதுடன் கலை, இலக்கியம் மற்றும் அரசு சேவை தொடர்பில் நிசங்க திதெனியவால் 2017.01.20 ஆம் திகதியும் கலாச்சார நலன்புரி திணைக்கள பணிப்பாளரால் 2017.03.17 ஆம் திகதியும் மிகநுட்பமான சொற்பொழிவு வழங்கப்பட்டது. 2017.05.26 ஆம் திகதி அனுபவம் வாய்ந்த ஆசிரியர் சோளானந்த சமரநாயக்கவால் நவின கவிதையில் சமூக விமர்சனம் என்பதன் கீழ், கண்ணுக்கு தெரியாத கவிதைகள் மற்றும் அரசாங்க சேவையில் அவர்களது படைப்புகள் என்பது தொடர்பில் தனது விரிவுரையில் வெளிப்படுத்தினார்.

2017.06.16 ஆம் திகதிய வெள்ளிக் கிழமை கருத்துக்கள நிகழ்ச்சியில் இரசாயனங்களற்ற உள்ளூர் உணவுப் பழக்க வழங்கங்கள் தொடர்பில் திணைக்கள அலுவலர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. அது இயற்கையின் அற்புதமான படைப்புகள் மூலம் வாழ்க்கையை அனுபவிப்பது எப்படி எனும் ஒரு புதிய அனுபவத்தை உருவாக்கியது. 2017.07.04 ஆம் திகதி சேர்லி உப்புல் குமாரவால் மிக வெற்றிகரமான ஓர் வெள்ளிக் கிழமை கருத்துக்கள நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. 2017.08.11 ஆம் திகதிய வெள்ளிக் கிழமை கருத்துக்கள நிகழ்ச்சியில் ரொட்னி வர்னகுல சூரிய தனது சொந்தக் கலை வாழ்வு பற்றிய அனுபவத்தை

திணைக்கள அலுவலர்களிடத்தே மகிழ்சியுடன் பகிர்ந்து கொண்டதுடன் 2017.09.08 ஆம் திகதி உள சுகாதாரத்தில் பொழுது போக்கைப் பயன்படுத்தல் தொடர்பில் கலாநிதி நலங்க எஸ். பட்டிப் பெருமா நிகழ்ச்சியை நடாத்தினார். 2017.10.13 அம் திகதி சங்கீத வெள்ளிக் கிழமை கருத்துக்கள நிகழ்ச்சியாக திணைக்கள அலுவலர்களை மகிழ்ச்சிப்படுத்தி திருமதி ரசிகா நில்மினியால் வழங்கப்பட்டது.



மூலம் – ஊடகப் பிரிவு

பல்வேறு துறைகளில் பிரதிநிதித் துவப்படுத்தும் புத்திஜீவிகள் மற்றும் கலைஞர்களிடமிருந்து பெற்ற பொழுது போக்கு அம்சங்கள் அலுவலக வாழ்க்கையில் நாளாந்தக் கடமைகளில் சோர்வுற்று சிக்கி நிற்கும் அலுவலர்களிற்கு புதுத்தெம்பை வழங்குவதுடன் அவர்கள் தங்கள் கடமைகளை ஆற்றுவதற்கு நேர்மறை ஆற்றலை தூண்டும்.

## 06. வருடாந்த சமூகநல நிகழ்ச்சித் திட்டம்

### 06. I. தேசிய ஓய்வூதியர் தினக் கொண்டாட்டம்

2005 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு ஐப்பசி மாதம் 08 ஆம் திகதியில் கொண்டாடப்பட்டு வரும் தேசிய ஓய்வூதியர் தின விழா 2017 ஆம் ஆண்டு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஏறத்தாழ மூன்று தசாப்தங்களாக அரச சேவையில் அளப்பரிய சேவையை வழங்கி ஓய்வு பெற்ற ஓர் உயரிய சந்ததியான ஓய்வூதியர்களுக்கு அரச மட்டத்தில் கௌரவம் வழங்கும் முகமாக தேசிய ஓய்வூதியர் தின விழா நடாத்தப்படுகிறது.

தேசிய ஓய்வூதியர் தின விழா " ஓய்வுக்கு வலுவூட்டல்" எனும் தொனிப் பொருளில் நாடளாவிய ரீதியாக நடாத்தப்பட்டது. அனைத்து ஓய்வூதியர்களது வாழ்வுக்கு ஓய்வூதியத்திற்கு அப்பாற்பட்ட தரமான சேவைகளை வழங்குதல், வாழ்க்கை மேம்படுத்துவதற்கான ஓர் உண்மையான பலமாக மேற்கூறப்பட்ட தொனிப் பொருளினூடாக ஓய்வூதியத் திணைக்களம் ஒரு நாடளாவிய ரீதியிலான கலந்துரையாடலை உருவாக்கியுள்ளது. இக்கொண்டாட்டம் கொழும்பை மையப்படுத்தாது அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி மாகாண மட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்டதுடன் அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றும் அலுவலர்கள் ஆர்வத்துடன் தம்மை இதற்கென சிறப்பாகத் தயார்ப்படுத்தினர். அத்துடன் பெரும் எண்ணிக்கையான பிராந்திய மற்றும் தேசிய மட்டத்திலான பெரும் எண்ணிக்கையான பல்வேறு ஓய்வூதியர் சமூகத்தினர் இந்நிகழ்வில் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தினர். இந்நிகழ்வில் வாய்ப்பாட்டு, வாத்தியங்கள் மற்றும் நாடகம் போன்றவை தொடர்பிலான ஓய்வூதிய சமூகத்தின் பல வேறு திறமைகள் வெளிக்கொணரப்பட்டன. இதற்கு மேலதிகமாக, தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் ஒவ்வொரு கொண்டாட்டத்தின் போதும் ஓய்வூதிய சமூகத்திற்கு பல்வேறு சேவைகளை வழங்குவதனூடாக தமது பங்களிப்பை நல்கியுள்ளதுடன் ஒவ்வொரு மாகாணத்திலும் அவர்களுக்கான தனித்துவமான பல்வேறு விரிவுரைகள் அடங்கலாக பட்டறைகள், சுகாதார முகாம்கள், படைப்புகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டது.



மூலம் – ஊடகப் பிரிவு

மதிப்புமிக்க அரசியல் அதிகாரத்திலுள்ளவர்களது பங்குபற்றுதலுடன் ஓய்வூதியத் திணைக்களத்தின் வழிகாட்டலுடன் மாவட்டச் செயலகங்களின் ஒத்துழைப்புடன் 2017 அம் ஆண்டில் தேசிய ஓய்வூதியர் தின விழாவானது நாடளாவிய ரீதியில் சிறப்புறக் கொண்டாடப்பட்டது.

### 06. II. தொழில்நுட்ப அமர்வு

நாட்டின் புத்தி ஜீவிகளின் பங்குபற்றலுடன் 2017 ஆம் ஆண்டின் தேசிய ஓய்வூதியர் தினத்துக்கு இணையாக ஓர் தொழில் நுட்ப அமர்வு கிராண்ட் ஒறியென்டல் விடுதியில் நடாத்தப்பட்டது.

இந் நிகழ்வில் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் கௌரவ ஜெ.ஜெ.

இரத்தினசிறி மற்றும் அமைச்சின் அலுவலர்கள், மாவட்டச் செயலாளர்கள், திணைக்களப் பிரதானிகள் போன்ற உயர் அதிகாரிகள் அடங்கலாக புத்தி ஜீவிகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் போன்றோரும் பங்குபற்றினர்.



மூலம் – ஊடகப் பிரிவு

இவ் அமர்வின் போது ஒய்வூதிய சமூகத்திற்குத் திறனுள்ள சேவையை வழங்குவதற்கு எவ்வாறு நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்துதல், ஒய்வூதிய விடயம் தொடர்பிலான அடிப்படைப் பிரச்சனைகள் மற்றும் ஓர் சமூகப் பாதுகாப்பாகக் காணப்படும் ஒய்வூதியம் தொடர்பில் எதிர்காலப் பரிமாணம் ஆகியவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. ஒய்வூதிய நடைமுறை மீதான வேறுபட்ட நோக்கு, தீர்வுகள், கருத்துகள் ஆகியவற்றின் மூலம் விசேட அறிவைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றதுடன் அரச சேவையில் கடமையாற்றும் அலுவலர்களின் முன்பாக விடயம் சார் பிரச்சனைகள் கொண்டுவரப்பட்டன. பெறப்பட்ட அனைத்துப் பரிந்துரைகளும் எதிர்காலத்தில் தயாரிக்கப்படும் ஒய்வூதியத் திணைக்கள நடைமுறைகளில் பயன்படுத்தப்படும். இலங்கை வங்கியே இத்தொழில் நுட்ப அமர்விற்கான முழுமையான அனுசரணை யாளர்களாவர்.

## 06. III. தமிழ் சிங்களப் புத்தாண்டு

சிங்களம் மற்றும் தமிழ் புத்தாண்டு பண்டிகை நாட்டின் மிகவும் புகழ்பெற்ற கலாச்சார திருவிழாக்களிற்கு இணையாக உள்ளது, ஒய்வூதியத் திணைக்களத்தால் தமிழ், சிங்களப் புத்தாண்டு காலாச்சாரப் பாரம்பரியங்களுடன் சிறப்புற 2017.04.22 ஆம் திகதி களனி வெதமுல்லை ஒய்வு விடுதியில் கொண்டாடப்பட்டது. இந் நிகழ்வில் விசேடமாக ஒய்வூதிய சமூகமடங்கலாக திணைக்கள அலுவலர்கள் மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வு பங்களிப்பாளர்களின் ஒற்றுமையை மேம்படுத்தும் பொருட்டு பாரம்பரிய கிராமிய விளையாட்டுக்களுக்கு முதன்மை வழங்கி ஒழுங்கு செய்யப்பட்டது. வயது வந்தோர் மற்றும் சிறுவர்களுக்கென வெவ்வேறு பிரிவுகளில் விளையாட்டுப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

பலதரப்பட்ட சேவைகளை ஒய்வூதியர் சமூகத்திற்கு வழங்கும் தனியார் மற்றும் அரச நிறுவனங்களின் மகத்தான பங்களிப்புடன் அநநிறுவனங்களின் அலுவலர்களும் தம் நிறுவனம் சார்பில் பிரதிநிதித்துவப் படுத்தியிருந்தனர். திணைக்களத்தின் ஊடகப்பிரிவு இந் நிகழ்வுகளில் நடைபெற்ற பொழுதுபோக்கு மற்றும் வேடிக்கை சம்பவங்களை தமது முகநூல் பக்கத்தில் நேரடி ஒலிபரப்பாக தரவேற்றியிருந்தது.



மூலம் – ஊடகப் பிரிவு

### 06. IV. ஊடகப் பாவனை

2017 ஆம் அண்டில் புதிய ஊடகப் பயன்பாட்டை அணுகியதானூடாக ஓய்வூதியர் சமுதாயத்தினரை ஓய்வூதியத் திணைக்களத்துடன் நெருக்கமாக கொண்டுவர முடிந்துள்ளது.

ஓய்வூதிய திணைக்களம் மற்றும் ஓய்வூதியம் தொடர்பில் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்தை ஈர்த்து பல்வேறு அச்சு ஊடகங்களில் வெளியிடப்பட்ட கட்டுரைகள் மட்டுமல்லாது பல்வேறு மின்னியல் மற்றும் அச்சு ஊடகங்களைப் பாவித்து ஓய்வூதியர் சமுதாயத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதனூடாக ஒரு துரிதமான சமுதாய சேவையை ஓய்வூதியருக்கு மட்டுமல்லாது அனைத்து அரச அலுவலர்களுக்கும் வழங்கியுள்ளது. திணைக்களத்தின் சுற்றறிக்கைகள் மற்றும் விஷேட கடிதங்கள், புள்ளி விபரத் தரவுகள், ஓய்வூதியக் கொடுப்பனவுகள், விஷேட அறிவித்தல்கள் மற்றும் இயங்கலைச் சாளரங்கள் ஆகிய தகவல்களை வழங்கும் பிரதான ஊடகமான அலுவலக இணையத் தளம் இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப் பட்டுள்ளது. திணைக்களத்தின் தகவல்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் அலுவலக சமூக வலைத் தளங்களான முகநூல் பக்கம் மற்றும் யூரியூப் வழியாக சமூகமயப்படுத்தப் பட்டுள்ளது.

ஓய்வூதியர்கள், அனைத்து அரச அலுவலர் சமூகம் மற்றும் சமுதாயம் ஆகியோரை இலக்காகக் கொண்டு 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் “விஷ்ராம” எனும் சஞ்சிகை அலுவலக இணையத் தளத்திலும் அலுவலக முகநூல் பக்கத்திலும் மாதாந்தம் வெளியிடப்பட்டது. அச்சஞ்சிகை பொருளாதாரம், சுகாதாரம், ஆக்கபூர்வப் படைப்புக்கள் & ஓய்வூதிய சமூகம் புத்திஜீவிகள் மற்றும் திணைக்கள அலுவலர்கள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட தரம்வாய்ந்த கட்டுரைகள் மூலம் தொகுக்கப்பட்டது.

அத்துடன் “ஓய்வூதிய வானொலி” எனும் இணைய வானொலியூடாக இணையத்தினூடான அறிவார்ந்த சுவையை மெல்லிசைப் பாடல்கள், சமூக நிகழ்ச்சிகள், சுகாதார நிகழ்ச்சிகள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மற்றும் செய்தி ஒளிபரப்புகள் ஆகிய பொழுது போக்கு விடயங்களை 2017 ஆம் ஆண்டில் வழங்க முடிந்தது.




மூலம் – ஊடகப் பிரிவு

## 07. நிதி மீளய்வு

வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஓய்வுபெற்ற அரச அலுவலர்களுக்கான சமூகப் பாதுகாப்பை வழங்குவதை முன்னிலைப் படுத்திய அடிப்படைக் கருத்திட்டங்களான மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவு மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடைக் கொடுப்பனவு ஆகியவற்றிற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இறந்த மற்றும் முப்படையினரின் சம்பளக் கொடுப்பனவுகள், ஓய்வூதியர்களுக்கான புகையிரத ஆணைச் சீட்டு, மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மற்றும் ஒரேதடவை மாத்திரம் வழங்கப்படும் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் ஆகியவற்றின் நிதி நிர்வாக மற்றும் கொடுப்பனவு செயற்பாட்டை முகாமை செய்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு ஓய்வூதிய கொடுப்பனவுத் தொகை ஒரு செலவீனத் தொகையாகக் காணப்பட்டபோதிலும் நேரிடையாக அரசுக்கு எதுவித பொருளாதார நன்மைகளும் கிடைக்கப் பெறுவதில்லை. மேலும் தொடர்ச்சியாக ஓய்வூதியம் வழங்கும் பொருட்டு அரசு தொடர்ந்து ஒதுக்கீட்டை மேற்கொள்வதுடன் நாட்டின் அபிவிருத்திக்கு அர்ப்பணிப்புடன் 30 வருடங்கள் சேவையாற்றிய அலுவலர்களுக்கான சமூக நலனை வழங்கி கௌரவிப்பது அரசின் கடப்பாடாகும்.

ஓய்வு பெறும் புதிய ஓய்வூதியர்களது எண்ணிக்கையைக் கருத்தில் கொள்கையில் ஓய்வூதியர்களது தொகையில் இவர்கள் 23,000 பேர் சேர்ந்து கொள்வதனால் தொடர்ச்சியான அபிவிருத்தி சாத்தியமாவதுடன் இவர்களில் குறைந்த எண்ணிக்கையான 1200 இறந்த ஓய்வூதியர்கள் இருந்தபோதும் 700இற்கு மேற்பட்ட விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய உரித்துடைய ஓய்வூதியர்களே காணப்படுகின்றனர். ஆகையால் ஓய்வூதியர்களது எண்ணிக்கை அதிகரிப்பதால் தொடர்ச்சியாக ஓய்வூதியர்கள் மரணமடையும் போது விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத்தில் குறைவடையும் நிலையை எதிர்பார்க்க முடியாது.

அட்டவணை 07

| மாதம் | மாதாந்த செலவுகள்(ரூபா. மில்) |
|---|---|
| மாதம் | 14,386.91 |
| ஜனவரி | 14,994.65 |
| பிப்ரவரி | 14,807.06 |
| மார்ச் | 14,828.75 |
| ஏப்ரல் | 14,660.22 |
| மே | 14,886.29 |
| ஜூன் | 15,208.86 |
| ஜூலை | 15,510.34 |
| ஆகஸ்ட் | 15,667.28 |
| செப்டம்பர் | 15,347.69 |
| அக்டோபர் | 15,629.53 |
| நவம்பர் | 16,079.95 |
| டிசம்பர் | **182,007.53** |

மூலம் –கணக்குப் பிரிவு

### 07.1. ஓய்வூதியப் பணிக்கொடைக் கொடுப்பனவு.

ஒவ்வொரு ஓய்வூதியரும் தாம் பெற்ற இறுதிச் சம்பளத்தின் அடிப்படையில் மற்றும் சேவை காலத்தின் அடிப்படையில் 24 மாதத்திற்கான குறைக்கப்படாத தொகையை பணிக் கொடையாகப் பெற உரிதுடையவராவார். ஏறத்தாழ வருடாந்தம் 2,000க்கும் மேற்பட்ட ஓய்வூதியர்கள் ஓய்வு பெறுவதால் ஏறத்தாழ 2,000 மில்லியன் ரூபா செலவிடப்படுகிறது. அத்துடன் 2017 ஆம் ஆண்டில் 26,305 ஓய்வூதியர்களுக்கு ஏறத்தாழ ரூபா. 18,753 மில்லியன் பணிக்கொடை செலவிடப்படுள்ளது. எவ்வாறெனினும் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் ஓய்வூதிய பணிக்கொடைக் கொடுப்பனவுத் தொகை பொதுத் திறைசேரியால் நேரடியாக வழங்கப்படாத போதிலும் மூன்று (3) அரச வங்கிகளிலிருந்து சுழற்சிக்கடன் பெறப்பட்டு ஓய்வூதிய பணிக் கொடைக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. பொதுத் திறைசேரி, ஓய்வூதியத் திணைக்களம் மற்றும் அரச வங்கிகள் இது தொடர்பில் உடன்படிக்கை ஒன்றை எட்டின. அதற்கமைய 2014-2017 மார்கழி மாதம் வரையான காலப்பகுதியில் மூன்று (3) அரச வங்கிகளிலிருந்து பெறப்பட்ட சுழற்சிக் கடன் தொகை ரூபா 50,592 மில்லியன் என்பதுடன் இக்கடன் மாறுபடும் வட்டி வீதத்தில் 18 வருட மீள் செலுத்துகைக் காலத்தின் கீழ்ப் பெறப்படுகிறது. கடன் தவணைக் கட்டணம் மற்றும் அதற்கான வட்டித் தொகைக்கான நிதி தேசிய வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கடனுக்கான மாதாந்த வட்டியாக இரட்டிப்பு வட்டி வங்கிகளிற்குச் செலுத்தப்படுகிறது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது கடன் வட்டி அதிகரிப்பானது ஏறத்தாழ 53% ஆக இருக்கிறது. 03/2016 ஆம் இலக்கச் சுற்றறிக்கைகமைய சம்பள அதிகரிப்பு மேற் கொள்ளப்பட்டமையே பணிக்கொடை அதிகரிப்பிற்குக் காரணமாகும். இத்தொகை 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டில் 107% ஆல் அதிகரிக்கும். ஆகவே பணிக்கொடைக் கொடுப்பனவிற்காக கிடைக்கும் கடன்களின் தொகை 2017 ஆம் ஆண்டுடன் பெருமளவு அதிகரித்துள்ளதுடன் அதற்கான வட்டியும் அதிகரித்துள்ளது.

- நிதிச் சுருக்கம்

அட்டவணை 08

| ஓய்வூதியக் கொடுப்பனவு | | |
|---|---|---|
| மாகாணம் | கொடுப்பனவு செய்யப்படும் ஓய்வூதியம் (ரூபா மில்) | ஓய்வூதியம்பெறுவோர் எண்ணிக்கை |
| வட மாகாணம் | 5,814.05 | 20,291 |
| வடமேற்கு மாகாணம் | 19,553.55 | 68,201 |
| மேல் மாகாணம் | 62,928.22 | 213,787 |
| வடமத்திய மாகாணம் | 10,095.32 | 36,927 |
| மத்திய மாகாணம் | 22,128.88 | 77,205 |
| சப்பிரகமுவ மாகாணம் | 13,734.25 | 47,992 |
| கிழக்கு மாகாணம் | 6,481.56 | 23,568 |
| ஊவா மாகாணம் | 8,378.41 | 31,020 |
| தென் மாகாணம் | 20,633.51 | 72,369 |
| மொத்தம் | **169,747.75** | **591,360** |

மூலம் –கணக்குப் பிரிவு

**விளக்கப்படம் 05**




- பணிக்கொடைக் கொடுப்பனவு

அட்டவணை 09

| பணிக்கொடைக் கொடுப்பனவு | | |
|---|---|---|
| பணிக்கொடைக் | தொகை (ரூ.மில்) | எண்ணிக்கை |
| சிவில் | 17,094.17 | 24,097 |
| படையினர் | 1,658.64 | 2,208 |
| கணிப்பிடல் | 481.63 | 1,426 |
| இறப்பு | 518.12 | 1,154 |
| வேறு* | 984.66 | 14,288 |
| மொத்தம் | **20,737.22** | **43,173** |

மூலம் –கணக்குப் பிரிவு

*சேவை பணிக்கொடை, விசேட இழப்பீடு, திருத்தம் கொடுப்பனவு

**விளக்கப்படம் 06**



அட்டவணை 10

| வங்கி ரீதியான பணிக் கொடைக்கொடுப்பனவு | | |
|---|---|---|
| வங்கி | 2016 ரூ.மில் | 2017 ரூ.மில் |
| மக்கள் வங்கி | 5,839.82 | 8,055.22 |
| இலங்கை வங்கி | 4,740.43 | 6,115.01 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2,400.92 | 3,420.56 |
| மொத்தம் | 12,981.17 | 17,590.79 |

மூலம் –கணக்குப் பிரிவு

விளக்கப்படம் 07




- **அரச சேவையின் போது இறக்கும் அல்லது ஊனமுற்ற பாதுகாப்பு அலுவலர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்**

அரசசேவையின் போது இறக்கும் அல்லது ஊனமுறும் பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் முப்படையினருக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் அவர்களது 55 வயது வரை தங்கி வாழ்வோருக்கு வழங்கப்படும்.

அட்டவணை 11

| அரச சேவையின் போது இறக்கும் அல்லது ஊனமுற்ற பாதுகாப்பு அலுவலர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் | | |
|---|---|---|
| செலவு | எண்ணிக்கை | ரூ.மில் |
| இராணுவம் | 35,599 | 24,717.32 |
| கடற்படை | 1,385 | 982.33 |
| விமானப்படை | 534 | 404.48 |
| போலீஸ் | 2,471 | 1,705.67 |
| மொத்தம் | **39,989** | **27,809.80** |

மூலம் –கணக்குப் பிரிவு

விளக்கப்படம் 08



ஒதுக்கீட்டுக் கணக்கு 2017

டி.ஜி.எஸ்.ஏ 1

செலவீனத் தலைப்பு இல: 253

திணைக்களத்தின் பெயர் :ஓய்வூதியத் திணைக்களம்

| வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித்திட்டஇல. | | (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|---|---|
| | வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்டபெயர். | வரவுசெலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | குறைநிரப்புஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | நி.ஓ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | மொத்தத் தேறியஒதுக்கீடு (1+2+3) | மொத்தச் செலவீனம் | தேறிய சேமிப்புத்பெறுபேறு /மேலதிகம் (4-5) |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 1 | <u>மீண்டுவரும்</u><br>செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | -<br>209,473,089,000 | 1,403,030,800 | (6,651) | 210,876,113,149 | 210,064,887,765 | 811,225,384 |
| | **உப மொத்தம் (மீண்டுவரும்)** | **209,473,089,000** | **1,403,030,800** | **(6,651)** | **210,876,113,149** | **210,064,887,765** | **811,225,384** |
| 1 | <u>மூலதனம்</u><br>செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | -<br>23,750,000 | 7,000,000 | 6,651 | 30,756,651 | 28,575,804 | 2,180,847 |
| | **உப மொத்தம் (மூலதனம்)** | **23,750,000** | **7,000,000** | **6,651** | **30,756,651** | **28,575,804** | **2,180,847** |
| | **முழு மொத்தம்** | **209,496,839,000** | **1,410,030,800** | **0** | **210,906,869,800** | **210,093,463,569** | **813,406,231** |

<u>நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் ஒதுக்கீட்டுக் கணக்கு 2017</u>

டி.ஜி.எஸ்.ஏ 2

செலவீனத் தலைப்பு இல: 253

திணைக்களத்தின் பெயர் : ஓய்வூதியத்திணைக்களம்

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 1 - செயற்பாட்டுத் திட்டம்

<u>மீண்டுவரும்மற்றும் மூலதனச் செலவினத்தின் சுருக்கம்</u>

| செலவீனத்தின் தன்மை (மாதிரி டீ.ஜீ.எஸ்.ஏ படிவத்துடன்) | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்புஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஓ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | (4) மொத்தத் தேறியஒதுக்கீடு (1+2+3) | (5) மொத்தச் செலவீனம் | (6) தேறிய சேமிப்புத்பெறுபேறு /மேலதிகம் (4-5) |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (அ)மீண்டுவரும் (டீ.ஜீ.எஸ்.ஏ. 3) | 209,473,089,000 | 1,403,030,800 | (6,651) | 210,876,113,149 | 210,064,887,765 | 811,225,384 |
| (ஆ)மூலதனம் (டீ.ஜீ.எஸ்.ஏ.4) | 23,750,000 | 7,000,000 | 6,651 | 30,756,651 | 28,575,804 | 2,180,847 |
| **மொத்தம்** | **209,496,839,000** | **1,410,030,800** | **0** | **210,906,869,800** | **210,093,463,569** | **813,406,231** |

கருத்திட்ட பிரகாரம் மீண்டு வரும் செலவீனம்

டி.ஜி.எஸ்.ஏ 3

செலவீனத் தலைப்பு இல: 253

திணைக்களத்தின் பெயர் : ஓய்வூதியத்திணைக்களம்

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 1 - செயற்பாட்டுத் திட்டம்

| கருத்திட்ட இலக்கம் /பெயர்,ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் சகல கருத்திட்டங்களுக்குமான ஏனைய செலவினம் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்புஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி.ஓ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | (4) மொத்தத் தேறியஒதுக்கீடு (1+2+3) | (5) மொத்தச் செலவீனம் | (6) தேறிய சேமிப்புத்பெறுபேறு /மேலதிகம் (4-5) |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| <u>01. பொதுநிர்வாகம் மற்றும் ஸ்தாபனம்</u> | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 40,500,000 | 0 | 17,225,345 | 57,725,345 | 57,188,825 | 536,520 |
| ஏனைய செலவினம் | 39,650,000 | 0 | 1,478,051 | 41,128,051 | 41,073,447 | 54,604 |
| **உப மொத்தம்** | 80,150,000 | 0 | 18,703,396 | 98,853,396 | 98,262,272 | 591,124 |
| <u>2. ஓய்வூதியத்தைஅமுல்படுத்துதல்</u> | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 408,200,000 | 0 | (8,800,000) | 399,400,000 | 399,293,125 | 106,875 |
| ஏனைய செலவினம் | 208,984,739,000 | 1,403,030,800 | (9,910,047) | 210,377,859,753 | 209,567,332,369 | 810,527,384 |
| **உபமொத்தம்** | 209,392,939,000 | 1,403,030,800 | (18,710,047) | 210,777,259,753 | 209,966,625,493 | 810,634,260 |
| **மொத்தம்** | **209,473,089,000** | **1,403,030,800** | **(6,651)** | **210,876,113,149** | **210,064,887,765** | **811,225,384** |

கருத்திட்ட பிரகாரம் மூலதனச் செலவீனம்

டி.ஜி.எஸ்.ஏ 4

செலவீனத் தலைப்பு இல: 253

திணைக்களத்தின் பெயர் : ஓய்வூதியத்திணைக்களம்

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 1 செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

கருத்திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 1 பொது நிர்வாகம் மற்றும் ஸ்தாபித்தல்

| செலவு விடய இல. | விடய இல | நிதி மூலம் (கொவை இல) | விடய பரப்பு | (1) வருடாந்த மதிப்பீட்டில் ஒதுக்கீடனு | (2) குறைநிரப்புஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஓ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டுஒதுக்கீட்டு மாற்றல்கள் | (4) மொத்தத் தேறியஒதுக்கீடு (1+2+3) | (5) மொத்தச் செலவீனம் | (6) தேறிய சேமிப்புத்பெறுபேறு / மேலதிகம் (4-5) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | | | 1. பொது நிர்வாகம்மற்றும் ஸ்தாபித்தல் | | | | | | |
| | | | <u>புனரமைப்பு மற்றும்மேம்படுத்தல்</u> | | | | | | |
| 2001 | | 11 | கட்டடங்கள் மற்றும் கட்டட அமைப்புக்கள் | 1,000,000 | 7,000,000 | 2, 341,651 | 10,341,651 | 10,341,650 | 1 |
| 2002 | | 11 | பொறிகள்மற்றும் இயந்திராதிகள் | 500,000 | 0 | 0 | 500,000 | 356,265 | 143,735 |
| 2003 | | 11 | வாகனங்கள் | 1,000,000 | 0 | 0 | 1,000,000 | 0 | 1,000,000 |
| | | | <u>மூலதனச் சொத்து கையகப்படுத்தல்</u> | | | | | | |
| 2102 | | 11 | தளபாடங்கள்மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1,000,000 | 0 | 0 | 1,000,000 | 814,584 | 185,416 |
| 2103 | | 11 | பொறிகள்மற்றும் இயந்திராதிகள் | 5,000,000 | 0 | 0 | 5,000,000 | 5,000,000 | 0 |
| | | | <u>திறன்அபிவிருத்தி</u> | | | | | | |
| 2401 | | 11 | பயிற்சி மற்றும் திறனபிவிருத்தி | 1,000,000 | 0 | 0 | 1,000,000 | 659,973 | 340,027 |
| | | | மொத்தம் | **9,500,000** | **7,000,000** | **2, 341,651** | **18,841,651** | **17,172,472** | **1,669,179** |

## நிகழ்ச்சித்திட்ட ரீதியான நிதிச் செலவீனப் பொழிப்பு

டி.ஜி.எஸ்.ஏ. -5

**திணைக்களத்தின்பெயர் : ஓய்வூதியத் திணைக்களம்**
**செலவீனத் தலைப்பு இல:253**

| | நிதியிடல் | நிகழ்ச்சித்திட்டம் 01 | | முழு மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|
| குறியீடு | குறியீட்டு விபரம் | தேறிய ஏற்பாடு 1 | உண்மைச் செலவீனம் 2 | தேறிய ஏற்பாடு 3 | உண்மைச் செலவீனம் 4 | செலவீன் சதவீதம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| 11 | உள்நாட்டு நிதி | 164,906,869,800 | 164,497,703,381 | 164,906,869,800 | 164,497,703,381 | 100 |
| 12 | வெளிநாட்டுக் கடன் | | | | | |
| 13 | வெளிநாட்டு உதவி | | | | | |
| 14 | மீள்நிரப்பப்படக்கூடியவெளிநாட்டுக் கடன் | | | | | |
| 15 | மீள்நிரப்பப்படுகின்ற வெளிநாட்டு உதவி | | | | | |
| 16 | எதிரிணை நிதியம் | | | | | |
| 17 | வெளிநாட்டு நிதியிடல் சார்ந்தஉள்நாட்டுச் செலவு | | | | | |
| 21 | விசேட சட்டச் சேவை | 46,000,000,000 | 45,595,760,188 | 46,000,000,000 | 45,595,760,188 | 99 |
| | **மொத்தம்** | **210,906,869,800** | **210,093,463,569** | **210,906,869,800** | **210,093,463,569** | **100** |

## கருத்திட்ட பிரகாரம் ஒவ் வொர் நிகழ்ச்சித்திட்டத்தினதும் நிதிச் செலவீனப் பொழிப்பு

(கருத்திட்ட பிரகாரம் ஒவ்வோர் நிகழ்ச்சித்திட்டத்தினதும் மீண் டெழும் செலவீனம் மற்றும் மூலதனச் செலவீனங்களின் நிதியிடல்)

**திணைக்களத்தின் பெயர் : ஓய்வூதியத்திணைக்களம்** டி.ஜி.எஸ்.ஏ. 5 (i)

**செலவீனத் தலைப்பு இல: 253**

**நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 1** செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

| நிதியிடல் | | கருத்திட்டம் 1 | | கருத்திட்டம்2 | | நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| குறியீடு | குறியீட்டு விபரம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவீனம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவீனம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவீனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 11 | உள்நாட்டு நிதியம் | 117,695,047 | 115,434,744 | 164,789,174,753 | 164,382,268,637 | 164,906,869,800 | 164,497,703,381 |
| 12 | வெளிநாட்டுக் கடன் | | | | | | |
| 13 | வெளிநாட்டுக் உதவி | | | | | | |
| 14 | மீள்நிரப்புவெளிநாட்டுக் கடன் | | | | | | |
| 15 | மீள்நிரப்புவெளிநாட்டு உதவி | | | | | | |
| 16 | எதிரிணை நிதியம் | | | | | | |
| 17 | வெளிநாட்டுநிதியிடல் சார்ந்து உள்நாட்டு செலவு | | | | | | |
| 21 | விசேட சட்ட சேவை | 0 | 0 | 46,000,000,000 | 45,595,760,188 | 46,000,000,000 | 45,595,760,188 |
| | **மொத்தம்** | **117,695,047** | **115,434,744** | **210,789,174,753** | **209,978,028,825** | **210,906,869,800** | **210,093,463,569** |

முற்பணக் கணக்கு மற்றும் வைப்புக் கணக்குகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் சுருக்கம் - 2017

குறிப்பு (ii)

செலவீனத் தலைப்பு இல: 253

திணைக்களத்தின் பெயர் : ஓய்வூதியத்திணைக்களம்

| | | திணைக்கள பதிவேடுகளின் பிரகாரம் | | | | |
|---|---|---|---|---|---|---|
| முற்பண/ வைப்பு கணக்குகளின் விபரங்கள் | கணக்கிலக்கம்* | 2017.01.01 திகதியன்று ஆரம்பமீதி | வருடத்தினுள் பற்றுவைத்தல் | வருடத்தினுள் வரவு வைத்தல் | 2017.12.31 திகதியன்று இறுதி மீதி | திறை சேரி ஏடுகளின் பிரகாரம் 2017.12.31 திகதியன்று மீதி |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i.அரச ஊழியர்களுக்கான முற்பணங்கள் | 25301 | 115,482,539.24 | 57,830,245.64 | 35,617,736.74 | 137,695,048.14 | 137,699,844.14 |
| ii.மற்றையமுற்பணங்கள் | | | | | | |
| iii. நானாவிதமுற்பணங்கள் | | | | | | |
| iv.வைப்பு | | | | | | |
| i.பொது வைப்பு | 6000-0000-00-0016-0103-000 | 1,291,444.50 | 1,083,525.92 | 593,940.63 | 801,859.21 | 801,859.21 |
| | 6000-0000-00-0013-0113-000 | 12,054,986.42 | 11,846,299.70 | 1,875,168.35 | 2,083,855.07 | 2,083,855.07 |
| | 6000-0000-00-0001-0114-000 | 410,000.00 | 420,000.00 | 95,960.00 | 85,960.00 | 85,960.00 |
| | 6000-0000-00-0018-0113-000 | 125.00 | 304,150.00 | 304,025.00 | 0.00 | 0.00 |
| | 6000-0000-00-0019-0032-000 | 0.00 | 1,814,800.00 | 4,179,800.00 | 2,365,000.00 | 2,365,000.00 |
| | 6000-0000-00-0002-0160-000 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |

**மாகாண அரச சேவைக்கான விதவை தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதி**
**2017.12.31 திகதியின் ஆண்டின் இறுதியில்**
**வருமானம் மற்றும் செலவு கணக்கு**

| விடயம் | தொகை(ரூ) | | விபரம் | தொகை(ரூ) | |
|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 | | 2016 | 2017 |
| ஓய்வூதியப் பங்களிப்பு | 3,958,703.02 | 203,298.97 | முதலீட்டு வட்டி – திறைசேரிப் பத்திரம் | 64,854.88 | - |
| | | | மூலதன ஆதாயம் | 663,337.45 | - |
| | | | குறை நிரப்பு | 3,230,510.69 | 203,298.97 |
| | **3,958,703.02** | **203,298.97** | | **3,958,703.02** | **203,298.97** |

**உள்ளூர் அரச சேவைக்கான விதவைகள் , தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதி**

**2017.12.31 திகதிய இருப்புத் தாள்**

| விபரம் | தொகை (ரூ:) | | விபரம் | தொகை (ரூ:) | |
|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 | | 2016 | 2017 |
| திரட்டப்பட்ட நிதி | 3,230,510.69 | 203,298.97 | முதலீடு | - | - |
| (-)குறைபாடு | (3,230,510.69) | (203,298.97) | | | |
| | - | - | முதலீட்டு வட்டி | - | - |
| | - | - | | - | - |
| | | | | | |

**உள்ளூர் அரச சேவைக்கான விதவைகள் , தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதி**

**2017.12.31 திகதிய முடிவில்**

**வருமானச் செலவீனக் கணக்கு**

| செலவீனம் | தொகை (ரூ:) | | வருவாய் | தொகை (ரூ:) | |
|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 | | 2016 | 2017 |
| | | | <u>பெறப்படும் வட்டி</u> | | |
| ஓய்வூதியப் பங்களிப்பு | 36,509,155 | 11,504,404 | திறைசேரி பிணைப் பத்திரங்கள் | 12,169,217 | 11,489,535 |
| வங்கி அறவீடு | - | 200 | மூலதனம் இலாபம் / இழப்பீட்டு கணக்கு | 3,004,372 | - |
| | | | பற்றாக்குறை (கூட்டு நிதிக்கு மாற்றீடு) | 21,335,565 | 15,069 |
| | **36,509,155** | **11,504,604** | | **36,509,155** | **11,504,604** |

## உள்ளூர் அரச சேவைக்கான விதவைகள் , தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதி

## 2017.12.31 திகதிய இருப்புத் தாள்

| பொறுப்புகள் | தொகை (ரூ:) | | சொத்துக்கள் | தொகை (ரூ:) | |
|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 | | 2016 | 2017 |
| திரள் நிதி | 145,919,044.06 | 124,688,492.05 | வருமானக் கணக்கு - திறைசேரிப் பிணைப் பத்திரம் | 121,777,430.32 | 121,777,430.32 |
| சேகரிப்பு மேலதிகம் | (21,335,565.24) | (15,069.35) | | | |
| | 124,583,478.82 | 124,673,422.70 | பெறத்தக்க முதலீட்டு வட்டி - திறைசேரிப் பிணைப் பத்திரம் | 2,806,048.50 | 2,895,992.38 |
| | **124,583,478.82** | **124,673,422.70** | | **124,583,478.82** | **124,673,422.70** |

**ஆசிரியர்களுக்கான  விதவை தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதி**
**2017.12.31 திகதியின் ஆண்டின் இறுதியில்**
**வருமானம் மற்றும் செலவுக் கணக்கு**

| விபரம் | 2016 ( ரூ. ) | 2017 ( ரூ. ) | விபரம் | 2016 ( ரூ. ) | 2017 ( ரூ. ) |
|---|---|---|---|---|---|
| பங்களிப்பை மீளளிப்புச் செய்தல் | 2,475,784.17 | 5,500,946.66 | ஆண்டு பங்களிப்பு | 61,607,825.40 | 81,709,939.57 |
| வரி | 3,551,158.46 | 4,847,683.51 | வருவாய் வட்டி | 47,375,314.46 | 60,596,043.67 |
| மேலதிகம் | 102,956,197.23 | 131,957,353.07 | | | |
| | **108,983,139.86** | **142,305,983.24** | | **108,983,139.86** | **142,305,983.24** |

## ஆசிரியர்களுக்கான விதவைகள் , தபுதாரர் மற்றும் அநாதைகள் ஒய்வூதிய நிதி

## 2017.12.31 திகதிய இருப்புத் தாள்

| | 2016 ( ரூ. ) | 2017 ( ரூ. ) | | 2016 ( ரூ. ) | | 2017 ( ரூ. ) | |
|---|---|---|---|---|---|---|---|
| திரட்டு நிதி | 1,248,804,325.14 | 1,350,530,396.46 | முதலீட்டுப் பெறுமதி | | 619,278,949.76 | | 639,617,175.66 |
| | | | சொத்து வளர்ச்சி | | | | |
| | | | பெறத்தக்க முதலீடு | 38,381,214.34 | | 75,985,097.14 | |
| | | | பெறத்தக்க நிதி | 276,483.99 | | 4,805,044.46 | |
| | | | எல்.டி இருப்பு பதிவு | 696,478,807.60 | 735,136,505.93 | 768,159,240.04 | 848,949,381.64 |
| சேர்கப்பட்ட மேலதிகம் | 102,956,197.23 | 131,957,353.07 | | | | | |
| | 1,351,760,522.37 | 1,482,487,749.53 | | | | | |
| தற்போதைய பொறுப்புகள் செலுத்த வேண்டிய வரிகள் | 2,654,933.32 | 6,078,807.77 | | | | | |
| | **1,354,415,455.69** | **1,488,566,557.30** | | | **1,354,415,455.69** | | **1,488,566,557.30** |

## பொதுச் சேவை சேமலாப நிதியம்

2017.12.31 இல் முடிவடைந்தத ஆண்டுக்கான

வருமானச் செலவு கணக்கு

| | 2017 | | 2016 | |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| வரிக்கு முந்தைய வட்டி வருமானம் | | **5,737,834,950** | | 5,372,972,437 |
| கழி : - வரி | | **(83,357,061)** | | |
| வரிக்குப் பிந்திய வட்டி வருமானம் | | **5,654,477,889** | | 5,372,972,437 |
| **கழி : - செலவுகள்** | | | | |
| மின்சாரம் | **465,078** | | 459,494 | |
| நீர் | **12,136** | | 9,933 | |
| ஊதியம் மற்றும் சம்பளம் | **10,399,153** | | 9,451,671 | |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | **461,583** | | 313,403 | |
| படிகள் | **57,500** | | - | |
| காகிதாதிகள் மற்றும் அலுவலகச் செலவீனங்கள் | **431,404** | | 29,050 | |
| இலவச புகையிரத ஆணைச் சீட்டு | **23,520** | | 88,071 | |
| தேய்மானம் | **25,188** | | 28,912 | |
| ஏனைய செலவுகள் | **15,495** | | 7,350 | |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | **172,500** | **12,063,558** | 172,500 | 10,560,384 |
| **மேலதிகம்** | | **5,642,414,331** | | 5,362,412,053 |
| **சேர்: பொதுச் சேகரிப்பில் இருந்து மாற்றல்** | | **2,769,293** | | 38,695,396 |
| பங்களிப்பாளர்களுக்கு ஒதுக்கீட்டுக்காக கிடைக்கும் வருமானம் | | **5,645,183,624** | | 5,401,107,448 |
| ஒதுக்கீட்டு வட்டி | | | | |
| கட்டாய பங்களிப்பு | **2,234,275,558** | | 2,136,134,565 | |
| தன்னார்வப் பங்களிப்பு | **3,468,034** | | 3,291,965 | |
| அரச பங்களிப்பு | **3,405,276,801** | **5,643,020,393** | 3,258,911,625 | 5,398,338,155 |
| பொதுச் சேகரிப்பு இலிருந்து / க்கு ஒதுக்கீட்டு மாற்றத்தின் பின்னரான வட்டி மீதி | | **2,163,231** | | 2,769,293 |

## பொதுச் சேவை சேமலாப நிதியம்

2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை

| சொத்துக்கள் | **2017** | | 2016 | |
|---|---|---|---|---|
| **நிலையான சொத்துக்கள்** | | | | |
| தளபாடங்கள் | **6,697** | | 7,440 | |
| அலுவலக உபகரணங்கள் | **92,628** | | 102,921 | |
| கணினி உதிரிப்பாகங்கள் | **80,197** | 179,522 | 94,349 | 204,710 |
| முதலீட்டுக் கணக்கு - கிரயத்திற்கு | | 34,050,366,302 | | 47,485,636,426 |
| **அசையும் சொத்துக்கள்** | | | | |
| முதலீட்டுச் செலவு | **18,870,215,298** | | | |
| வருமதி வட்டி | **2,229,078,288** | | 1,623,191,785 | |
| வருமதி அரச பங்களிப்புக்கள் | **571,964,015** | | 1,328,057,178 | 571,964,015 |
| சீரமைப்பு கணக்கு | **29,209,393** | | 27,668,536 | |
| முன் கட்டணம் | **141,721** | | 141,721 | |
| கணக்கு மீதி | **223,640,307** | 21,369,688,938 | 828,898,299 | 3,051,864,356 |
| **மொத்தச் சொத்து** | | 55,420,234,761 | | 44,469,460,910 |
| **பொறுப்புகள் மற்றும் மதிப்பீடு** | | | | |
| **திரட்டு நிதி** | | | | |
| கட்டாய பங்களிப்புகள் | **21,479,409,368** | | 19,492,427,748 | |
| தன்னார்வப் பங்களிப்புகள் | **33,394,939** | | 30,144,795 | |
| அரச பங்களிப்புகள் | **33,418,512,038** | **54,931,316,345** | 30,307,548,483 | 49,830,121,027 |
| **இருப்பு** | | | | |
| மூலதன இருப்பு | **3,790** | | 3,790 | |
| பொது இருப்பு | **2,163,231** | **2,167,021** | 2,769,293 | 2,773,083 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | | |
| சென்மதி கணக்காய்வுக் கட்டணம் | **517,500** | | 1,803,741 | |
| அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய விசேட கொடுப்பனவு | **474,425,527** | | 675,936,899 | |
| சென்மதிச் செலவுகள் | **11,808,369** | **486,751,396** | 27,070,742 | 704,811,382 |
| **மொத்த பொறுப்புகள் மற்றும் மதிப்பீடு** | | **55,420,234,763** | | 50,537,705,492 |